இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2022. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 146 | இதழ் : 18 | திகதி : 27.11.2022 | விலை : 50.00

## கிறிஸ்து பிறப்பை அர்த்தம் உள்ள வகையில் பகிர்வின் உணர்வோடு கொண்டாடி மகிழ்வோம்

### திருவருகைக்காலச் சுற்றுமடலில் யாழ். ஆயர்


திருவருகைக்கால ஆரம்பத்தில் குருக்கள், துறவியர், பொது நிலையினருக்கு யாழ். ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் அனுப்பி வைத்த சுற்று மடலிலேயே இவ்வாறான ஒரு வேண்டுகோளை விடுத்துள்ளார்.

அவ் அறிக்கையில் "கிறிஸ்மஸ் என்பது ஈகையின் காலமாகும். இறைமகன் இயேசு எம்மை மீட்பதற்காகத் தம்மையே வெறுமையாக்கி மனித அவதாரம் எடுத்தார். நாமும் அவரைப்போல் பொருளாதார நெருக்கடி மிகு இக்காலத்தில் ஏழை எளிய மக்களோடு அவர்களது வறுமையில், தேவையில் எம்மிடம் உள்ளவற்றைப் பகிர்ந்து, அவர்களது வாழ்வை வளமாக்கி மகிழ்வுறச் செய்ய வேண்டுமென்பதே கிறிஸ்து பிறப்புக்காலம் எமக்கு விடுக்கும் அழைப்பாகும்" என ஆயர் குறிப்பிட்டுள்ளார்

*ஆயரின் முழுமையான சுற்று மடலினை பக்கம் 03 இல் காண்க*

## ஆயர் அருட்பொழிவின் 7ம் ஆண்டில் வாழ்த்துகின்றோம்

பெருநதியாய்
யாழ். மறைமண்ணை நனைக்கும்
ஆயன் ஒன்று கண்டோம்
ஆற்றோரம் நடப்பட்ட
மரங்களானோம்
இதயத்தில் ஈரம் சொரிவீர்
உதய விடியலில்
தாகம் கொள்வீர்
அறிவுக் கலயத்தில்
குறைவில்லா ஞானமுடன்
களமாடும்
உறுதியின் பாறை ஆயன் நீர்
வைர வரிகளால் வாழ்த்துகின்றோம்
நல்லாயன் இயேசுவின்
தீராத அன்பிலிருந்து



யாழ். ஆயரின் ஆயர் அருட்பொழிவு தினம்
28.11.2022

## மரியாயின் சேனையின் வெள்ளி விழா




மானிப்பாய்ப் பங்கின் புனித ஆரோக்கிய மாதா பிரசீடியத்தினர் தமது வெள்ளி விழாவைக் கடந்த 16ம் திகதி பங்குத்தந்தை ம.றெக்ஸ் சவுந்தரா அடிகளாரின் தலைமையில் நன்றித் திருப்பலி ஒப்புக்கொடுத்துக் கொண்டாடி மகிழ்ந்தனர். அன்றைய தினம் மாலை திருமதி மரியறோஸ் அவர்களின் தலைமையில் கலை நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு யாழ். மறைமாவட்ட மரியாயின் சேனை கொமிசியத்தின் ஆன்மீக இயக்குநர் அருட்தந்தை ம. றெஜி இராஜேஸ்வரன் அடிகள் பிரதம விருந்தினராக வருகை தந்து சிறப்பித்தார். அவரோடு கூடவே சிறப்பு விருந்தினராக அருட்தந்தை றே. றெனால்ட் அடிகளும் கௌரவ விருந் தினர்களாக யாழ். மறைமாவட்டக் கொமிசியத் தலைவர் செல்வி றஞ்சினி அவர்களும் மானிப்பாய் திருக்குடும்பக் கன்னியர்சபை மேலாளர் அருட்சகோதரி மெர்ளின், அருட்சகோதரி நீற்றா அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

13.09.1997 அன்று அருட்தந்தை இயூஜின் பிரான்சிஸ் அடிகளின் வழிநடத்தலில் திருமதி செபமாலையம்மா யேசுதாசன் அவர்களின் தலைமையில் ஐந்து உறுப்பினர்களோடு புனித ஆரோக்கிய மாதா பிரசீடியம் ஆரம்பிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. ஆரம்ப காலத்தில் இவர்களை காலம் சென்ற அருட்சகோதரி நிசப்ரா அவர்கள் வழிநடத்தினார்.

## பேராசிரியராகப் பதவி உயர்வு



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிறிஸ்தவ மற்றும் இஸ்லாமிய நாகரித்துறைகளின் தலைவரும், முதுநிலை விரிவுரையாளருமான அருட்கலாநிதி போல் றொகான் அடிகள், பேராசிரியராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார். யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்ற பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டத்தில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமங்களுக்கு அமைவாகவும், மூதவையினால் விதந்துரைக்கப்பட்ட துறைசார் நிபுணர்களின் மதிப்பீட்டு அறிக்கைகள், நேர்முகத் தேர்வு முடிவுகள் ஆகியன இப்பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அவற்றின் அடிப்படையில், அருட்கலாநிதி போல் றொகான் அடிகள் பேராசிரியராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார். அடிகளாரைப் பாதுகாவலன் வாசக நெஞ்சங்கள் சார்பாக வாழ்த்தி நிற்கின்றோம்.

## போதைக் கலாசாரத்தை எதிர்த்து இளவாலைப் பொது நிலையினர் கவனயீர்ப்பு



"போதையெனும் உயிர்க் கொல்லி எம்பாதையில்: இனியும் விழித் தெழாவிட்டால் எம் சந்ததியின் எதிர் காலம் என்ன?அனைவரும் கரம் கோர்ப்போம் ஓரணியாய்" எனும் தொனிப்பொருளில் இளவாலை மறைக் கோட்ட பொது நிலையினர் கழகத்தால் கவனயீர்ப்பு முன்னெடுக்கப்பட்டது. இதன்போது "புகைக்காதே அழகான வாழ்வைத் தொலைக்காதே", 'போதைப்பொருளுக்கு எதிரான செயற்பாடு எமது சமூகப் பொறுப்பு என் பதை உணர்வோம்", "போதையின் திசையில் வாழ்வின் பாதையை மாற்றாதே", "போதைப் பாவனை நம் வாழ்வுக்கு சூனியம்", "போதைப்பொருள் அரக்கனை எதிர்த்திடத் துணிவோம்", உள்ளிட்ட பல வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறு மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்தில் குருக்கள், துறவியர், இறைமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## கத்தோலிக்கப் பாரம்பரியத்திற்குப் பிரமாணிக்கமாக இருங்கள்

**- திருத்தந்தை**



அனைத்துலக இறையியல் ஆணையத்தின் உறுப் பினர்களைத் திருப்பீடத்தில் சந்தித்தபோது இவ்வாறு கூறியுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கிறிஸ்து வில் உலகளாவிய உடன்பிறந்த உணர்வுநிலைப் பணியில் திருஅவையாக ஒன்றித்து வாழ்வதற்கு இயேசு நம்மை அழைக்கிறார் என்றும், இதுவே நற்செய்தியின் அறிவிப்புப் பணியின் மையம் என்பதையும் எடுத்துரைத் துள்ளார்.

இந்நேரத்தில் வரலாற்றில் நிகழ்ந்த மூன்று நிலைகளை அவர்களுக்குச் சுட்டிக் காட்ட விரும்புவதாகக் கூறிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், முதலாவது கத்தோலிக்கப் பாரம்பரியத்திற்குப் பிரமாணிக்கமாக இருப்பது என்றும், இரண் டாவதாக, பொருத்தமான வாழ்வு முறைகளை மேற்கொள்வது என்றும், மூன்றாவதாக, ஒன்றித்துப் பயணிப்பது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இறையியலின் பணிகளைக் கடைப்பிடிப்பதற்கான உறுதிப்பாட்டை உண்மை யுடனும் அன்புடனும் ஏற்றுக்கொள்வதும் குறைப்பதும் முதல் நிலையில் அமைகிறது என்று கூறியுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அப்போஸ்த லிக்கப் பாரம்பரியத்தின் முன்னேற்றத்திற்காக இறைவனின் ☛ 02

# எமது எண்ணம்

## திருவருகைக்காலம்

மீண்டும் ஒரு திருவருகைக்காலம் ஆரம்பமாகின்றது. கிறிஸ்து பிறப்புத் தயாரிப்புக்காலத்தைத் திருஅவை இலத்தீன் மொழியில் 'அத்வென்திஸ்' என்று குறிப்பிடுகின்றது. அதாவது 'வருதல்' என்று பொருள்படும். அண்டவரின் மறுவருகை யைத் திருத்தூதர் புனித பவுல் 'மாரனாத்தா' (1கொரி 16:22) என்ற அரமாயிக் சொல்லாடலைப் பயன்படுத்திக் கொரிந்து திருஅவைக்கு நம்பிக்கையூட்டுகின்றார். அதன் பொருள் 'ஆண்டவரே வாரும் என்பதாகும்.

ஆண்டுதோறும் அன்னையாம் திருஅவை 'மாரனாத்தா' என்ற சொல்லாடலைத் திருவருகைக் காலத்தின் நம்பிக்கை முழக்கமாகக் கொண்டுள்ளது. ஒவ்வோர் ஆண் டும் கிறிஸ்து பிறப்பினைத் தயாரிப்பது, அதைக் கொண்டாடு வது என்பது நமக்குள் புதிய நம்பிக்கையைத் தட்டி எழுப்புகின்றது.

எதிர்வரும் காலத்தை எழுச்சியோடு பெற்றுக்கொள்ள கிறிஸ்து பிறப்புக்காலம் மாபெரும் ஆசீர்வாதமாக அமைகின்றது. ஆண்டவரின் முதல் வருகையை அவரது மானிடப் பிறப்புப் பெருவிழாவை நினைவூட்டி மகிழ்ச்சியுடன் கொண்டாடுவது, அவரின் மறுவருகைக்காக நம்பிக்கையுடன் காத்திருப்பது, ஆகிய இந்த இரண்டு காரணங்களுக்காகத் திருஅவை திரு-வருகைக் காலத்தைச் சிறப்பிக்கின்றது.

திருவருகைக்காலக் காலக் கொண்டாட்ட மரபானது ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த பிரான்சின் தூர் மறைமாவட்ட ஆயர் பெர்பேத்துஸ் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது என்கின்றார் தூர் நகர புனித கிரகோரி. இதன் நோக்கம் கிறிஸ்து பிறப்புப் பெருவிழாவைக் கொண்டாட 40 நாட்கள் ஒறுத்தல் முயற்சிகளை மேற்கொள்வது.

கி.பி. 567 இல் கூட்டப்பட்ட தூர் திருச்சங்கம், நவம்பர் 11 தூர் நகர புனித மார்ட்டின் திருநாளில் இந்த புனித ஒறுத்தல் தொடங்குவதாகக் குறிப்பிடுகின்றது. இதுவே திருவருகைக் காலத்தைப் பற்றிய முதல் குறிப்பாகும். தூர் மறைமாவட்டத்தில் மட்டும் அனுசரிக்கப்பட்ட கிறிஸ்மஸ் தயாரிப்பு ஆனது திருத்தந்தை புனித பெரிய கிரகோரி காலத்தில் (590-604) ஒரு கொண்டாட்டமாக மாறியது. பேரரசன் சார்ல்மாங் ஆட்சியில் தபசுடன் கூடிய ஒரு பெரும் விழாவாக உரோமை பேரரசில் உருவெடுத்தது.

ஐந்து வார திருவருகைக்கால அனுசரிப்பு தற்போது நான்கு வாரத் தயாரிப்புக் கொண்டாட்டமாக மாறியுள்ளது. கிறிஸ்து அரசர் பெருவிழாவுக்கு அடுத்து வருகின்ற ஞாயி-றே திருவருகைக் காலத்தின் தொடக்கமாகும். திருவருகைக் காலத்தின் இறுதி எட்டு நாட்கள் (டிசம்பர் 17-24) தனிச்சிறப்பு வாய்ந்தவையாகக் கருதப்படுகின்றன. எனவே திருஅவை மீட்பரின் திருவருகையை ஆவலோடு எதிர்பார்த்திருப்பதைக் காட்டும் விதத்தில் அவ் மன்றாட்டுக்கள் மிகுந்த நம்பிக்கையோடு அமைகின்றன. இந்தாண்டு திருவருகைக் காலம் நவம்பர் 27 அன்று துவங்குகின்றது. திருவருகைக் காலத்தில் இயேசுவின் மறுவருகையை முன்னிறுத்தி விவிலியப் பகுதிகள், இறைவேண்டல்கள் தரப்படுகின்றன. வெறும் கொண்டாட்டமாக மட்டும் கடந்து சென்றுவிடாமல் முந்தயக் காலத்தின் ஒறுத்தல் முயற்சிகளையும் திரு அவை வலியுறுத்துகிறது. கிறிஸ்து பிறப்பை அர்த்தமுள்ளதாக மாற்ற பல்வேறு இறைநம்பிக்கை அடையாளங்களைக் கையாளு வதும் சிறப்பு.

திருவழிபாட்டின் ஆண்டு திருவருகைக்கால தொடக்க நாள் திருவழிபாட்டுக் புத்தாண்டாகக் கொண்டாடப்படுகின்றது. திரு அவை திருவழிபாட்டுக் காலத்தை நான்காகப் பிரித்து நம்பிக்கையாளர்களை நற்செய்தியின் பாதையில் ஆண்டு முழுவதும் வழிநடத்துகிறது.


திருவருகைக் காலம் (கிறிஸ்து பிறப்புக் காலத்தையும் உள்ளடக்கியது), தவக்காலம் (ஆண்டவரின் பாடுகள் இறப்பைத் தியானித்தல், துன்பத்தை ஏற்கும் பக்குவம் பெறுதல்), பாஸ்குகாலம் (ஆண்டவரின் உயிர்ப்பு அனுபவங்களைப் பெறுதல்) பொதுக்காலம் (கிறிஸ்துவின் திருமுழுக்கு முதல் கிறிஸ்து அரசர் பெருவிழா வரை 34 வாரங்களை உள்ளடக் கிய காலம்). திரு அவையின் நான்கு காலங்களை வண்ணங் களால் அடையாளப்படுத்தி அதன் புரிதலைத் தருகின்றது. திருவருகைக்காலம் - ஊதா (தயாரிப்பு, ஒறுத்தல்), கிறிஸ்து பிறப்புக்காலம் - வெண்மை (கொண்டாட்டம், மகிழ்ச்சி), தவக்காலம் - ஊதா - சிகப்பு (செபம், தவம், துன்பம் - தியாகம்), பாஸ்குக் காலம் (வெற்றி, நிறைவு, அமைதி), பொதுக்காலம் பச்சை (காத்திருப்பு). ஞாயிறு வழிபாட்டை மூன்று ஆண்டு சுழற்சியாகவும், வாரநாட்கள் வழிபாட்டை இரண்டு ஆண்டு சுழற்சியாகவும் கொண்டு இறைமக்களுக்கு விவிலிய அறிவை மிக எளிதாகத் திருஅவை பறைசாற்றுகின்றது.

இவ்வாறு நாள்தோறும் திருப்பலியில் பங்கெடுப்பவர் மூன்றாண்டுகளில் திருவிவிலியத்தை முழுமையாக வாசித்து முடிக்கின்றார். எனவே கத்தோலிக்கத் திருஅவையில் திருவிவிலியம் வாசிக்க வாய்ப்பு ஏற்படுத்தவில்லை என்பது அறியாமை. கிறிஸ்துவின் போதனைகளை அறிவிப்பதில் திருஅவை தன்னை உண்மையாகவே அர்ப்பணித்துக் கொண்டுள்ளது.

**அருட்பணி.எஸ்.எயின்சிலி றொஷான்**

# மறைந்த இரு அமலமரித் தியாகிகள்





யாழ் மாகாண அமலமரித் தியா-கிகள் சபையைச் சேர்ந்த அருட்பணி F.A.தேவராஜ் அடிகளாரும் அருட்பணி J.திருச்செல்வம் அடிகளாரும் முறையே கடந்த நவம்பர் 05ம், 06ம் திகதிகளில் காலமானார்கள்.

அடிகளார்களின் ஆன்மாக்கள் நித்தி யத்தில் இளைப்பாற இறைவேண்டல் செய்வதுடன் துயருற்றிருக்கும் அமல மரித் தியாகிகளுக்கும், உறவுகளுக்கும் எம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

# துயர் பகிர்கின்றோம்

கிளரேசியன் சபையைச் சேர்ந்த மல்லாவிப் பங்குத்தந்தை அருட்பணி நேசன் குலாஸ் (வரதன்) அடிகளாரின் அன்புத்தந்தை **திரு. பிலிப் குலாஸ்** அவர்கள் கடந்த 12.11.2022 அன்று இறைபத மடைந்தார். அன்னாரின் இழப்பில் துயருற்றிருக்கும் அருட்தந்தைக்கும் உற்றார், உறவினர்களுக்கும் எமது செபங்களுடன்கூடிய ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து நிற்பதுடன் அவரின் ஆன்மா நித்தியத்தில் இளைப்பாற இறைவனிடம் மன்றாடி நிற்கின்றோம்.

செபமாலைத்தாசர் சபையைச் சேர்ந்த அருட்பணி ஜெபன் அடிகளாரின் அன்புத்தாயார் **திருமதி மேரி கற்பலங்காரி** அவர்கள் கடந்த 06.11.2022 அன்று இறைபதமடைந்தார். அன்னாரின் இழப்பில் துயருற்றிருக்கும் அருட்தந்தைக்கும் உற்றார், உறவினர்களுக்கும் எமது செபங்களுடன்கூடிய ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து நிற்பதுடன் அவரின் ஆன்மா நித்தியத்தில் இளைப்பாற இறைவ-னிடம் மன்றாடி நிற்கின்றோம்.

## ஆனைக்கோட்டை அடைக்கல அன்னை ஆலயத்தில் முதியோர் கௌரவிப்பு நிகழ்வு



ஆனையூர் அடைக்கல அன்னை ஆலயத்தைச் சேர்ந்த முதியோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு ஒன்று கடந்த வாரம் ஆனைக்கோட்டை ஐக்கிய சனசமூக நிலையத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்டது.

இந்நிகழ்வில் நூற்றுக்கும் மேற்பட்ட முதியோர்கள் கௌரவிக்கப்பட்டு அவர்களுக்குப் பரிசுப் பொருட்களும் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஆனையூர் அடைக்கல அன்னை ஆலயப் பங்குத்தந்தை அருட்பணி A.ஞானப்பிரகாசம் அடிகளார் முதியோர் விசுவாச வாழ்வின் ஆணிவேர்களாக இருக்கின்றார்கள். அவர்களின் வழிகாட்டலில் இளையோர் விசுவாசத்திலும், ஒழுக்க வாழ்விலும் நிலைபெற்று வாழவேண்டும் எனத் தமது உரையில் குறிப்பிட்டார்.

## அனுபவங்களின் அமுதசுரபியாகத் திகழ்பவர்கள் முதியவர்கள்



"அனுபவங்களின் அமுதசுரபியாகத் திகழ்பவர்கள் முதியவர்கள்" என்ற மையப்பொருளில் முதியோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு சாவகச்சேரி புனித லிகோரியார் ஆலயத்தில் கடந்த 30.10.2022 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 7.00 மணிக்கு புனித வின்செண்ட் டி பவுல் தின சிறப்புத் திருப்பலியைத் தொடர்ந்து இடம்பெற்றது. இந் நிகழ்வில் புனித வின்செண்ட் டி பவுல் சபையினர் தமது விழாவைச் சிறப்பித்ததுடன், 75 வயதிற்கு மேற்பட்ட 17 முதியோர்களைக் கௌரவித்து அவர்களிற்கான அன்பளிப்புக்களையும் வழங்கி வைத்தனர். புனித வின்செண்ட் டி பவுல் சபையினரின் ஒழுங்குபடுத்தலில் பங்குத்தந்தை அருட்பணி ஞா. ஞானரூபன் அவர்களின் தலைமையில் மிகவும் சிறப்பாக இடம்பெற்ற இந் நிகழ்வில் அருட்சகோதரிகள், பங்கு மக்கள் நலன் விரும்பிகள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.


## கத்தோலிக்கப் பாரம்பரியத்திற்குப் பிரமாணிக்கமாக இருங்கள்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வார்த்தையைக் கேட்பதிலும், காலத்தின் அறிகுறிகளுக்கு ஏற்ப அதனைப் புரிந்துகொண்டு செயற்படுத்து வதிலும் தூய ஆவியாரின் துணையை நாடுதல் அவசியம் என்றும் எடுத்துக்காட்டியுள்ளார்.

கத்தோலிக்கரில்லாதவர்கள் உட்பட வல்லுநர்களின் ஆலோசனைகள் வழியாக, ஆணைக்குழுவின் சட்டங்களின்படி, நற்செய்தியை ஆழமாக்குதல் மற்றும் அதனை வளர்ப்பதற்கான பணிகளைப் பொருத்தமாகவும், கூர்மையாகவும் செயற்படுத்துவதற்காக, பல்வேறு துறைகளின் பங்களிப்பிற்கு விவேகத்துடன் திறந்த மன-துடன் செவிமடுப்பதைத் தனது இரண்டாவது சிந்தனையாகப் பகிர்ந்துகொண்டார் திருத்தந்தை பிரான்சிஸ். திருஅவையின் வாழ்க்கை மற்றும் பணிகளில் ஒன்றிணைந்த பயணம் பற்றிய முந்தைய ஐந்தாண்டுகளில் இது சம்பந்தமாகத் தயாரிக்கப்பட்ட ஆவணத்தில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளதுபோல், மற்றக் கிறிஸ்தவப் பணிகளைப் போலவே, இறையியலாளர்களின் பணியும் தனிப்பட்டதாக இருப்பதுடன், குழுமப் பணியாக அமைந்துள்ளது என்பதை உணர்வது தனது மூன்றாவது கருத்தாகப் பகிர்ந்துகொண்டார் திருத்தந்தை பிரான்சிஸ்.

# காவலன் கலசம்




## இறை இரக்கத்தாலும் திரு ஆட்சிப் பீடத்தின் பணிப்பினாலும் யாழ் மறை மாவட்ட ஆயரான ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆகிய நாம் குருக்கள், துறவியர், பொதுநிலையினர் ஆகிய இறைமக்களுக்கு விடுக்கும் திருவருகைக்கால சுற்றுமடல்



Circular No: 23 /2022

*"உன்னதங்களிலே கடவுளுக்கு மகிமை உண்டாகுக.*
*உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக"*

(லூ. 2:14)

திருவருகைக்காலத் தொடக்க நாள் திருவழிப்பாட்டுக் காலத்தின் புத்தாண்டாகக் கொண்டாடப்படுகின்றது. "ஆண்டவரே வாரும்" என அன்னையாம் திருஅவை திருவருகைக் காலத்தில் நம்பிக்கையுடன் முழக்கமிட்டு வருகின்றது. திருவருகைக் காலத்தில் எம்மை ஆன்மீக ரீதியில் பக்குவப்படுத்திப் பாலக இயேசுவை எம் இதயங்களிலும், இல்லங்களிலும் மகிழ்வுடன் வரவேற்போம். கிறிஸ்துபிறப்பின்போது உன்னதங்களிலே கடவுளுக்கு மகிமையும் உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதியும் உண்டாகின்றது. *(காண். லூக். 2:14)*

கிறிஸ்மஸ் என்பது ஈகையின் காலமாகும். இறைமகன் இயேசு எம்மைப் பாவநிலையிலிருந்து மீட்பதற்காகத் தம்மையே வெறுமையாக்கி மனித அவதாரம் எடுத்தார். தம்மையே வெறுமையாக்கிய தன் வழியாக நாமும் பிறருக்காக எம்மிடமுள்ளவற்றைப் பகிர்ந்து வாழவேண்டுமென விரும்புகின்றார். பொருளாதார நெருக்கடி மிகுந்த இக்காலத்தில் ஏழை, எளிய மக்களோடு அவர்களது வறுமையில், தேவையில் எம்மிடம் உள்ளவற்றைப் பகிர்ந்து, அவர்களது வாழ்வை வளமாக்கி மகிழ்வுறச் செய்ய வேண்டுமென்பதே கிறிஸ்து பிறப்புக் காலம் எமக்கு விடுக்கும் அழைப்பாகும்.

"மிகச் சிறியோராகிய என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததை எல்லாம் எனக்கே செய்தீர்கள்" (மத் 25:41) எனவே இவ்வாண்டில் கிறிஸ்து பிறப்பைப் பகிர்வின் உணர்வோடு அர்த்தமுள்ள மகிழ்ச்சியின் பண்டிகையாக்குவோம்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் 2025 ஆம் ஆண்டை யூபிலி ஆண்டாகப் பிரகடனம் செய்துள்ளார். இவ் யூபிலி ஆண்டின் கருப்பொருளாக "எதிர்நோக்குடன் திருப்பயணிகள்" (PILGRIMS OF HOPE) தரப்பட்டுள்ளது. யூபிலி விழாவுக்கு எம்மை ஆயத்தப்படுத்தும் முகமாக அடுத்த ஆண்டு முதல் "எதிர்நோக்கு", "திருப்பயணிகள்" எனும் இரு சொற்பதங்களையும் ஆழ்ந்து தியானிக்குமாறு திருத்தந்தை விரும்புகின்றார்.

வத்திக்கானில் 2023ம் ஆண்டு நடைபெறவிருக்கும் கூட்டொருங்கியக்க 16ஆவது உலக ஆயர்கள் மாமன்றம் 2023ம் ஆண்டும், 2024ம் ஆண்டும் ஒக்டோபர் மாதங்களில் இருநிலைகளில் நடைபெறவுள்ளது. இம்மாநாட்டிற்கான முன்தயாரிப்புப் பணிகள் கண்டங்கள் அளவிலான இரண்டாவது நிலை வரைபுத் தொகுப்பு தயார்ப்படுத்தப்பட்டுள்ளது.

இறைமக்களாகிய நீங்கள் எமது மறைமாவட்டம் மேற்கொண்ட செயற்திட்டங்களுக்கு வழங்கிய பூரண ஒத்துழைப்புக்கு எனது நன்றிகளைத் தெரிவித்து நிற்கின்றேன்.

போதை எனும் வாதையில் சிக்கிப் பாதை தெரியாது நடைப்பிணங்களாக எம் சமூகம் இன்று பயணிக்கின்றது. எம் நாட்டில் வடமாகாணமே போதைக்கு அடிமையாகி விற்பனையில் முதன்மையில் உள்ளமை வருந்தத்தக்கது. போதைப்பொருட்களைச் சரளமாக எங்கும் பெற்றுக்கொள்ளக் கூடிய நிலை தோன்றியுள்ளது. நகரங்கள், கிராமங்கள், முக்கிய பாடசாலைகளை அண்மித்த இடங்களில் மாணவர்களுக்கு விற்பனை செய்யப்படுவது கண்டிக்கப்பட வேண்டியதாகும். எனவே பெற்றோரும், சமூகத்தில் பொறுப்புடன் உள்ளவர்களும் இவ் விடயத்தில் கூடிய கவனம் செலுத்த வேண்டும். பாதிக்கப்பட்ட இளையோரை மீட்டெடுக்க வேண்டும். போதை அடிமையில் வாழ்வோருக்கு நலன்புரி நிலையங்கள் அமைக்கப்பட்டு மறுவாழ்வு கொடுக்கப்பட வேண்டும். அடிமைத்தனத்திற்குள் சிக்காது எம் பிள்ளைகளை முன்னெச்சரிக்கையுடனும் கண்டிப்புடனும் வளர்க்க வேண்டும். பிள்ளைகளைக் கூர்மையாக அவதானித்து, அவர்களில் நடத்தை மாற்றம் உணரப்படும் போது தாமதமின்றி உளவளத் துணையை நாடி அவர்களை ஆற்றுப்படுத்த வேண்டும்.

இவை அனைத்திற்கும் மேலாக எம் இளையோர் போதைக்கு அடிமையாவதற்குக் காரணமாகிய சுய முயற்சியின்மை, சோம்பல், கல்வியைத் தொடராமை, வேலையின்மை போன்ற காரணிகளுக்குள் இளையோர் சிக்காமல் அவர்களைக் கல்வியிலும் தொழிற் பயிற்சியிலும் ஈடுபட்டு உழைக்க எம் கல்விச் சமூகம் உயர் கல்வி நிலையங்களை உருவாக்கி வழிசமைக்க வேண்டுமென வலியுறுத்தி நிற்கின்றேன்.

கொரோனா பெருந்தொற்றின் விளைவாக முழு உலகும் பொருளாதார வளத்தில் நலிந்துள்ளமை உலகறிந்த உண்மையே. இலங்கைத் தீவு மிகமோசமான வரலாறு காணாத பொருளாதார நெருக்கடிக்குள் இவ்வாண்டு சிக்குண்டமை வேதனைக்குரியது. இதற்கு எம் நாட்டின் அரசியல் நிலைமையும் ஊழலின் உச்ச நிலமையுமே காரணம் எனப் பொருளாதார வல்லுநர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். நீதியோடு, நேர்மையோடு மக்களுக்காகப் பணியாற்றும் அரசியல் தலைமை கடந்த காலங்களில் இல்லாமை துரதிக்ஷ்டவசமானது. புத்தாண்டில் இலங்கை அரசியலில் மாற்றங்கள் நிகழ வேண்டும். அதற்காகத் தேர்தல்கள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பது மக்களின் இன்றைய விருப்பமாக உள்ளது. எனவே நேர்மையான, நீதியான மக்கள் மையப்படுத்தப்பட்ட அரசியலை நடாத்தக் கூடிய தலைவர்களைத் தேர்ந்து கொள்வது இறைமக்களாகிய எமது பொறுப்பும், கடமையும் என்பதை உணர்ந்துகொள்வோம். போலியான வாக்குறுதிகளுக்கும், உறுதிமொழிகளுக்கும், பாரம்பரியத்துவ அரசியலுக்கும் முக்கியம் கொடுப்பதைத் தவிர்த்து, நிலையான அமைதியை ஏற்படுத்தி இப்பாரிய பொருளாதார நெருக்கடியிலிருந்து எம் நாட்டை மீட்கவல்ல ஓர் அரசாங்கத்தை இலங்கை பெற்றுக்கொள்ள இறைவேண்டல் செய்வோம். 2022ம் ஆண்டில் பிறக்கவிருக்கும் பாலக இயேசு, 2023ம் புத்தாண்டில் நல் எதிர்நோக்கையும் அன்பையும், நம்பிக்கையையும், அமைதியையும் கொண்ட புத்தாண்டை எல்லோருக்கும் அருள்வாராக.

கிறிஸ்து பிறப்பு விழாவிலும், புத்தாண்டிலும் உங்கள் குடும்பத்தினருக்கு என் இறையாசீரை வழங்கி நிற்கின்றேன்.

கிறிஸ்துவிலும் மரி அன்னையிலும்
பக்தியுள்ள
*பேரருட்திரு ஜஸ்ரின் பேணாட்*
*ஞானப்பிரகாசம்*
யாழ் மறைமாவட்ட ஆயர்

# திருவருகைக் கொண்டாட்ட அடையாளங்கள்


கிறிஸ்து பிறப்புப் பெருவிழாவிற்கு முன்பு வருகின்ற நான்கு ஞாயிற்றுக் கிழமைகள் திருவருகைக் காலமாகும். இந்த ஞாயிற்றுக்கிழமைகளை வரவேற்கும் விதத்தில் திருவருகைக் கால மலர்வளையங்கள் கிறிஸ்துவில் மலரும் நிறைவாழ்வைப் பற்றி அறிவிக்கின்றன. இவ்வழக்கம் 16 ஆம் நூற் றாண்டில் ஜெர்மனியில் கத்தோலிக்கர் மற்றும் லூத்தரன் கிறிஸ்தவர்களிடையே தோன்றியது. விவிலிய வாசிப்பு, கிறிஸ்து பிறப்புப் பாடல்கள், மெழுகுதிரி ஏற்றுதல், இறைவேண்டல் செய்தல், ஆண்டவரின் பிறப்பை முன்னறிவித்தல் எனக் களைக்கட்டுகின்றன. திருவருகைக்கால மலர் வளையத்தில் வைக்கப்படும் நான்கு மெழுகுதிரிகள் 'ஒளியாம் இறைவன்' கிறிஸ்து பிறப்பு மூலம் தன் மக்களைச் சந்திக்க வருகின்றார் என்ற செய்தியைத் தருகின்றது. ஒவ்வொரு ஞாயிறன்றும் ஒவ்வொரு புதிய இறைச்செய்தியுடனும் இத்திரிகள் ஏற்றப்படுகின்றன.

**நம்பிக்கையின் திரி:**

கிறிஸ்துவின் பிறப்பை முன்னறிவித்த முதுபெரும் தந்தையர் மற்றும் இறைவாக்கினர்களைக் குறித்து நம்பிக்கையின் ஒளியாக ஏற்றப்படுகிறது. இது இறைவாக்கின் மெழுகுதிரி எனவும் பொருள்படும். இத்திரியின் நிறம் ஊதா. இந்நிறம் செபம், தபம், தியாகம் மற்றும் தயாரிப்பை அறிவுறுத்துகின்றது.

**அன்பின் திரி:**

கிறிஸ்துவின் பிறப்பிற்கு ஆயத்தமாக பெத்லகேம் நோக்கிப் பயணித்த புனிதமிக்க கன்னி மரியாவையும், புனித யோசேப்பையும் குறித்து அன்பின் ஒளியாக ஏற்றப்படுகிறது. இது பெத்லகேம் மெழுகுதிரி எனவும்




பொருள்படும். இத்திரியின் நிறமும் ஊதா.

**மகிழ்ச்சியின் திரி:**

இளஞ்சிவப்பு நிறத்திலுள்ள இத்திரி இயேசு பிறந்தவுடன் அவரைக் காணவந்த இடையர்களைக் குறித்து மகிழ்ச்சியின் ஒளியாக ஏற்றப்படுகிறது. இறைவனால் வாக்களிக்கப்பட்ட மீட்பரின் பிறப்பைக் கொண்டாடும் மட்டற்ற மகிழ்ச்சியை இத்திரி அறிவிக்கின்றது.

**அமைதியின் திரி:**

கிறிஸ்துவின் பிறப்பினால் உலகம் அனுபவிக்கும் அமைதியை அறிவிக்கும் வானதூதர்களைக் குறித்து அமைதியின் ஒளியாக ஏற்றப்படுகிறது. கிறிஸ்துவின் அமைதி நல்லெண்ணம் கொண்ட யாவரையும் நிரப்புகின்றது. இத்திரியின் நிறம் ஊதா.

**கிறிஸ்துவின் திரி:**

இறுதியாக கிறிஸ்து பிறப்பு இரவில் இத்திரிகளுக்கு நடுவில் வெள்ளைத் நிற திரி ஏற்றப்பட்டு,'கடவுள் நம்மோடு' என்ற மாபெரும் மகிழ்ச்சியூட்டும் செய்தியைத் தருகின்றது. மேலும் வெள்ளைநிற இத்திரி இயேசு தூய்மையும், நன்மையும் நிறைந்த நமது மீட்பர் என்பதைக் குறிக்கிறது. கிறிஸ்துவின் பண்புகளை ஏற்றல் கிறிஸ்துமஸ் தயாரிப்புக்காலம். இன்று பெரிதும் வியாபாரமயமாகிக் கிறிஸ்து அல்லாத கிறிஸ்துமஸ் ஆகிவிட்டது என்பது பெரும் வேதனை. வெறும் கொண்டாட்டமாக மாறிவருவது பெரும் ஆபத்தாகும். கிறிஸ்து பிறப்புப் பெரு விழாவின் உன்னத நோக்கம் உயர்த்திப் பிடிக்கப்படவேண்டும். அதுவே மகிழ்ச்சியான சமூக நல்லிணக்கத்திற்கு வழிவகுக்கும். கிறிஸ்துமஸ் செய்திகளான அன்பு, அமைதி, மகிழ்ச்சி, சகோதரத்துவம், சமத்துவம் போன்றவற்றைத் தருவது திருவருகைக்கால ஆகும்.

எனவே பகுதிகள், கொண்டாட்டங்கள், விவிலிய அடையாளங்கள் வழியாகக் கிறிஸ்துவைப் பற்றிய பண்புகளையும், இறைமக்களுக்குப் படிப்பினையையும் தருவதில் திரு அவை ஆர்வம் கொண்டுள்ளது. கிறிஸ்துவின் பிறப்பில் இறையன்பு அருள்மழையாக மானிடருக்குப் பொழியப்படுகிறது. கடவுள் மனிதனைத் தேடிவரும் அதிசயம் கிறிஸ்துமஸ் நள்ளிரவில் ஏற்படுகின்றது. தெய்வீகமும், மனிதமும் நிறைந்த தெய்வக்குழந்தை நமக்காகப் பெத்லகேம் மாட்டிடைக் குடிலில் மரியின் மகனாக மலர்ந்துள்ளார். நம்மை அரவணைக்க இறைவனின் கரங்கள் விண்ணிலிருந்து மண்ணகம் வரை விரிந்துள்ளது. எனவே வாருங்கள் இறைவனைப் போற்றுவோம் என திரு அவை மக்களை மன்றாடவும், கொண்டாடவும், பறைசாற்றவும் அழைக்கின்றது. திரு அவையின் அழைப்பை ஏற்போம், - திருவருகைக்காலத்தை அர்த்தமாக்குவோம்.

*நன்றி : நம்வாழ்வு*

# காவலன் கலசம்




### யாழ் திருத்தூது முதல்வராக ஆயர் கிறிஸ்தோப்பர் ஏணஸ்ற் பொன்ஜீன் அ.ம.தி. (1868-1883)

இக் கட்டுரைப் பகுதியில் சென்ற இதழ் தொடர்ச்சியில் தவறு ஏற்பட்டமையால் அதைச் சீர்செய்து 16.10.2022 திகதி பத்திரிகையின் தொடர்ச்சியாக இக் கட்டுரை தொடர்கின்றது

**அழைத்தல் வாழ்வு**

கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்ற வேண்டுமென்ற தமது உண்மைத்தன்மையை நிரூபித்தவராக குருமடம் செல்வதற்குத்தமது சம்மதத்தையும் ஆசீரையும் வழங்கினார்….

தனது 19வது வயதில் இளம் ஏணஸ்ற் பொன்ஜீன் 1842ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் கிளேர் மொண்ட்டில் சல்பீசியன் (Sulpicians) துறவற சபையினரால் நடாத்தப்பட்ட பெரிய குரு மடத்தில் இணைந்தார். இவர் குருமடத்தில் இணைந்த இரண்டாம் வருடம் 1844ம் ஆண்டு ஜனவரி மாதம் 1ம் திகதி இவரது தந்தையார் இறுதி அருளடையாளங்கள் பெறாத நிலையிலேயே இறைவனடி சேர்ந்தார். ஆறு மாதங்கள் சென்ற பின் அவரது இளைய சகோதரர் எமிலும் அதேபோன்றே இறைவனடி சேர்ந்தார். அடுத்தடுத்து இவரது குடும்பத்தில் இடம்பெற்ற இவ்விரு துன்பியல் நிகழ்வுகளும் இவ்விளம் துறவியை எவ்வளவு பாதித்ததெனில் ஒரு அந்நிய நாட்டில் மறைப்பணியாளராகத் தமது வாழ்வு

**அருட்பணி S.V.B. மங்களராஜா**

முழுவதையும் அர்ப்பணிக்கும் ஒரு துணிச்சல் மிக்க முடிவையெடுத்து இத்தியாகத்தால் தமது தாயாரின் வாழ்வில் இறை நம்பிக்கையை ஏற்படுத்தத் தீர்மானித்தார். 1845ம் ஆண்டு தமது கடைசி விடுமுறைக்கு வீடு சென்றபோது தாம் மேற்கொண்ட இம்முடிவைப் பற்றித் தமது சகோதரியிடம் தெரிவித்தார். அவர் இது பற்றிக்கவலையடைந்தாலும் அவருக்காக இறைவனை வேண்டுவதாக வாக்களித்தார். அருட் சகோதரர் ஏணஸ்ற் தமது முடிவு பற்றித் தம் பங்குத்தந்தையிடம் தெரிவித்தார். 1846ம் ஆண்டு கிளேர்மொண்டில் உள்ள குருமடத்தில் தமது குருத்துவக்கல்வியை நிறைவு செய்த பின் தமது தாயாருக்கும், சகோதரிக்கும் உணர்வு பூர்வமான ஒரு பிரியா விடை மடலை எழுதிய பின் பரீஸ் நகரிலுள்ள வெளிநாட்டு மறைத்தளங்களுக்கு மறைபணியாளரைத் தயாரித்து அனுப்பவென ஏற்படுத்தப்பட்ட குருமடத்திற்கு (Les Missions Estrangeres de Paris) (MEP) (Society of Foreign Mission of Paris) ஏதாவது ஒரு வெளிநாட்டில் வேறு சமயங்களைப் பின்பற்றுவோரை மதமாற்றுவதற்குத் தனது வாழ்வை அர்ப்பணிக்கும் நோக்குடன் சென்றார். இச்சபையில் சேரும் குருக்கள் துறவற சபை எதிலும் சேராது மறைமாவட்டக்குருக்களைக்கொண்ட ஒரு சபையாக இருந்த வண்ணம் தமது உறுப்பினர்களை வெளிநாடுகளுக்கு மறைபணியாளர்களாக அனுப்புவர். அருட்சகோதரர் பொன்ஜீனுடைய விருப்பம் சீனாவுக்கு அல்லது ஜப்பானுக்கு ஒரு மறைப்பணியாளராகச் செல்ல வேண்டுமென்பதே. இவர் பரீஸ் மாநகரப் பேராயர் பேரருட்திரு. ஆப்ரே (Affre) ஆண்டகையால் 1846ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 19ம் திகதி குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். நான்கு மாதங்களின் பின் அப்போது தான் புதிதாகத் திருத்தூது மாவட்டமாக ஏற்படுத்தப்பட்ட இந்தியாவில் உள்ள கோயம்புத்தூருக்கு அனுப்பப்பட்டார்.

தமது தியாகத்தின் வெளிப்பாடாகத் தமது தாயாரிடமும், சகோதரியிடமும் சென்று பிரியாவிடை கூற அடிகள் விரும்பவில்லை. ஆயினும் இந்தியாவுக்குக் கப்பலேறச்சற்று முன்னர் தமது தாயாரிடமிருந்து அவருக்கு ஒரு மடல் வந்திருந்தது. அதில் அவருக்குப் பெரும் ஆறுதலாக இருந்த விடயம் தமது தாயார் இறைநம்பிக்கையுடையவராக மனம் மாறிய விடயம் இருந்தது. கடைசியில் இறைவன் தனது வேண்டுதலுக்குச்செவிசாய்த்துள்ளார் என்று மனநிறைவும், மகிழ்ச்சியுமடைந்தார்.

**கோயம்புத்தூரில் மறைபணியாளராகப் பணி**

தென் ஆபிரிக்காவின் நன்னம்பிக்கை முனையைச்சுற்றி வந்த இந்தியப் பயணம் பல மாதங்களின்பின் பொன்ஜீன் அடிகள் 1847ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20ம் திகதி கோயம்புத்தூரில் வந்திறங்கினார். புதிதாக உருவாக்கப்பட்ட அத்திருத்தூது மறைமாவட்டத்தில் அப்போது 7 குருக்கள்தான் பணியாற்றிக்கொண்டிருந்தனர். வியத்தகு ஆன்மீகத் தாகம் கொண்டவராகவும், இளமைத் துடிப்புடனும் அத்திருத்தூது மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் 9 வருடங்கள் பணியாற்றினார். இக்காலப்பகுதியில் இவர் அனேகமாகப் பங்குத் தளங்களில் பணிபுரிவதையும், அயர்லாந்து நாட்டுப்போர் வீரர்களது ஆன்ம குருவாகவும் பணியாற்றியிருந்தார். இங்கு பங்குப்பணிகளில் வினைத்திறனுடன் பணியாற்றத் தமிழில் நல்ல அறிவும் அதே போல் அயர்லாந்து போர் வீரர்களுடன் தொடர்புகளைப்பேண நல்ல ஆங்கில அறிவும் தேவைப்பட்டது. எனவே இவ்விரு மொழிகளையும் நன்கு கற்றார். பின்னர் தமிழ் இலக்கணத்தில் ஒரு நூலை முதலாகத் தயாரித்தார்.

*(தொடரும்...)*

## ‘திருமறை முத்துக்கள்’

அருட்பணி. தே. யூட்தாஸ்

**201. இறைவன் எமக்கு எத்தனை கட்டளைகளைத் தந்துள்ளார்?**

இறைவன் எமக்குப் பத்துக் கட்டளைகளைத் தந்துள்ளார்.

**202. பத்துக் கட்டளைகளை எடுத்தியம்புக?**

1. உன் முழு இதயத்தோடும், முழு உள்ளத்தோடும், முழுமனத்தோடும் உன் ஆண்டவராகிய கடவுளிடம் அன்பு செலுத்து.
2. உன் கடவுளாகிய ஆண்டவரின் பெயரை வீணாகப் பயன்படுத்தாதே. 3. ஓய்வு நாளைத் தூயதாகக் கடைப்பிடிப்பதில் கருத்தாய் இரு. 4.உன் தந்தையையும் தாயையும் மதித்து நட.
5. கொலை செய்யாதே. 6.விபச்சாரம் செய்யாதே.
7. களவு செய்யாதே. 8. பிறருக்கு எதிராகப் பொய்ச்சாட்சி சொல்லாதே. 9. பிறர் மனைவியைக் கவர்ந்திட விரும்பாதே.
10. பிறருக்கு உரியது எதையும் கவர்ந்திட விரும்பாதே.

**203.யார் பத்துக் கட்டளைகளை எமக்குத் தந்துள்ளார்?**

பழைய ஏற்பாட்டில் இறைவன் மோசேக்குப் பத்துக் கட்டளைகளைக் கொடுத்துள்ளார். புதிய ஏற்பாட்டில் கிறிஸ்து அதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

**முதலாம் கட்டளை**

**204. முதலாம் கட்டளையைத் தருக?**

உன் முழு இதயத்தோடும், முழு உள்ளத்தோடும், முழு மனத்தோடும் உன் ஆண்டவராகிய கடவுளிடம் அன்பு செலுத்து.

**205. முதலாம் கட்டளையூடாக எவற்றைச் செய்ய நாங்கள் பணிக்கப்படுகிறோம்?**

முதலாம் கட்டளையூடாக நாங்கள் எமது நம்பிக்கை, எதிர்நோக்கு, பிறரன்பு, மறைவாழ்வு ஊடாக ஒரே, உண்மையுள்ள, வாழும் இறைவனை ஆராதிக்க நாம் பணிக்கப்படுகின்றோம்.

**206.நம்பிக்கைக்கெதிரான பாவங்கள் எவை?**

நம்பிக்கைக்கெதிரான பாவங்களாவன: பொய்யான மதங்கள், அறிவுக்குட்பட்ட ஐயப்பாடுகள், நம்பிக்கையின்மை, விசுவாச உண்மைகளில் ஏதாவது ஒன்றை மறுத்தல், திருஅவையின் கோட்பாடுகள் மட்டில் அசட்டையுடன் இருத்தல்.

**207.நம்பிக்கையை இழக்கக்கூடிய ஆபத்து வரக்கூடிய சந்தர்ப்பங்கள் எவை?**

நம்பிக்கையை இழப்பதற்கான ஆபத்து உருவாகக் கூடிய சந்தர்ப்பங்களாவன: எமது ஆன்மீகக் கடமைகளில் அசண்டையாயிருத்தல், எம்மைப் பாவத்திற்கு இட்டுச் செல்லக்கூடியவற்றிலிருந்து விலகியிருத்தல், (உதாரணம்: கெட்ட புத்தகம் வாசித்தல், தீய நண்பர்களோடு சேர்தல்) எமது நம்பிக்கைக்குத் தடை வரக்கூடிய இடங்களைத் தவிர்த்தல்.

**208.எதிர்நோக்கிற்கெதிரான பாவங்கள் எவை?**

எதிர்நோக்கிற்கெதிரான பாவங்களாவன நம்பிக்கையின்மை, முற்சார்புத் தன்மை.

**209.முற்சார்புத்தன்மைஎன்றால்நீர்விளங்கிக்கொள்வது என்ன?**

முற்சார்புத்தன்மை என்றால் ஒருவரை நாம் நேரடியாகத் தொடர்பு கொள்வதற்கு முன்னராக அவரைப் பற்றிக் கொண்டிருக்கும் எண்ண அலைகளை, மனப்பாங்குகளைக் குறித்துக் காட்டுகின்றது.

*(தொடரும்...)*

# குடும்பங்களை வடிவமைக்கும் சிற்பிகள் திருக்குடும்ப சபைக் கன்னியர்கள்

(சென்றவாரத் தொடர்ச்சி...)

காலச்சக்கரம் கடுகதி வேகத்தில் சுழன்று 73 ஆவது அகவையில் ‘பவள விழாவைக்’ கண்டுகளிக்கின்ற இக்காலத்தில், இவர்களால் பிறப்பாக்கம் செய்யப்பட்ட பல குடும்பங்கள் திரு அவையை அலங்கரிக்கின்றனர். சமுதாய எழுச்சிகளுக்கு உந்து சக்தியாக இருக்கின்றனர். ஒருவருடைய வாழ்வும் வளமும் பெண்களின் கைகளில்தான் அதிகம் தங்கியுள்ளது என்பர். பட்டறிவும், ஞானமும், நேர்மனப்பாங்கும் கொண்ட பெரியோர் அந்த வகையில் தம் அர்ப்பணிப்பான தியாகம் நிறை சேவையினால் பண்டத் தரிப்பில் ‘நல்ல குடும்பங்களை’ உருவாக்கியதன் பயனாக, மனித நேயமுள்ள நல்ல பொது நிலையினர், ஆயர்கள், குருக்கள், துறவிகள், உயர் கல்வித் தகைமை தொழில் தகைமை பெற்ற ஆசான்கள், சமூகப் பணியாளர்கள், வைத்தியர்கள், தன்னார்வப் பணியாளர்கள், கல்விமான்கள், பலருக்கு வாழ்வு கொடுப்போர், ‘நல்மனம் படைத்தோர்’, ‘தக்கார்’ என்று வள்ளுவர் கூறிய வார்த்தைக்கிணங்க, உள்நாட்டிலும்




வெளிநாட்டிலும் உலகை உயிர்ப்பூட்டல் செய்யும் பங்காளிகளாகப் பலருடன்கை கோர்த்துப் பயணிக்கின்றனர்.

ஒரு நாட்டில் குடும்பங்கள் சீராக சிறப்பாக இருந்தால், அங்கு பொருளாதாரம், நாகரீகம், கலாசாரம், பண்பாடு, நல்லாட்சி, மனித மாண்பு, விழுமியச் சீராக்கம், ஆரோக்கியம், அமைதி, பரந்த மனப்பாங்கு, பகிர்வு, பிறரன்பு, மெய்ப்பொருளாம் கடவுளைத் தன்னிலும் பிறரிலும் பிரபஞ்சத்திலும் காணும் அகன்ற பார்வைகள் பெருகும். அங்கு கடவுள் பக்தி மடைதிறந்த வெள்ளம்போல் கிளர்ந்தெழும். நெஞ்சிலும் மனத்திலும் மனசாட்சியிலும் கடவுள் பேசும் குரல்கேட்கும். எல்லோரையும் எல்லாவற்றையும் ‘ஒன்றாய்க்காணும்’ பரந்த மனம் பலரின் வாழ்வில் தெளிவாய் தெரியும்.

இதையே இயேசுவும் இவ்வாறு சொன்னார். ‘நல்ல மரமெல்லாம் நல்ல கனிகளைக் கொடுக்கும்’ (மத்.7:17). இவ்வாறு நல்ல குடும்பங்களை வடிவமைத்து, அவர்களோடு பயணித்து அவர்கள் பிள்ளைகளை நல்ல கனிகளாகத் தொடர்ந்து உருவாக்கி, மேற்கூறப்பட்ட பணிகளாலும் தம் வாழ்வுப் பிரசன்னத்தாலும் ‘அழகானதொன்றும் இவ்வுலகில் இல்லை, நீ எம்மோடு பயணித்த நாட்கள் போல’ என்று இறைவனுக்கு மகிமை யும் நன்றிப்பண்ணும் மகிழ்ந்துபாடும் இவர்கள், இப்பவளவிழாவிலும் பாராட்டப்பட வேண்டியவர்களே.

*நான் ஆண்டவரில் களிகூர்வேன் என் மீட்பராம் கடவுளில் மகிழ்ச்சியுறுவேன். ஆண்டவராகிய என் தலைவரே! என்*

**அருட்சகோதரி நெவிஸ் லடிஸ்லாஸ்**

*வலிமை அவர் என் கால்களைப் பெண் மானின் கால்களைப் போலாக்குவார் உயர்ந்த இடங்களுக்கு என்னை கடத்திச் செல்வார்.*
*(அபகூக் 3:18-19)*

## என் கவியும் நானும்

ஏன் இந்தப் போதை?
கால்கள் கடுத்திட கால்நடையாய் சென்றிட்ட
பாதைப் பயணங்கள் மாண்டதனால் வினை
கோடிக்கணக்கில் கொட்டிக் கிடக்குது
போதை அரக்கனால் பூமியோ வேகுது

வேலிகளே சொந்த நாற்றுக்களை மேயுது
காலிச் செயல்களால் கர்ப்பங்கள் சாகுது
மேலை கலாசார போதை தலைக்கேறி
சாலை விபத்தால் நம் இனம் மாளுது

பூட்டிய வீட்டதன் நீண்ட தனிமையும்
காட்டிய காணொளிக் காட்சித் திரைகளும்
றோட்டிலே தான் கண்ட நேற்றைய காதலும்
போட்டி போட்டு வந்து நாசம் நிறைக்குது

பள்ளிக்குச் சென்றிட்ட பிள்ளைகளை நோக்கி
நல்ல வடிவத்தில் போதை வருகுது
கள்ளமில்லாப் பிஞ்சு வாழ்விங்கே சாகுது
கொல்லும் விசம் குளிர் குச்சியில் உள்ளது

ஆதிநாட் தொட்டு நாம் போற்றிய பண்புகள்
பாதி வயதோடு பாழாகிப் போகுது
நாதியற்று நாங்கள் வீதி வருமுன்னர்
சாதி மதமற்று போதையை தாக்குவோம்

நல்லொளுக்கமுடன் நன்மை தரு நாளில்
எள்ளளவேனும் இப்போதையை
- தொடோமென
நல்லதொரு மொழி நெஞ்சில் நிறுத்துவோம்
எல்லோருக்கும் வழிகாட்டியே வாழ்வோம்

*அருட் சகோ. வி.ஜெ.யேசுதாஸ்*
*புனித சவேரியார் குருத்துவக்கல்லூரி*

# மறைவாழ்வில் புதிய முன்னேற்றங்கள்

## யாழ். மறைமாவட்ட முதல் சுதேச ஆயர் ஜேக்கப் ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி.

**யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட (மன்னார், அனுராதபுரம் மாவட்டங்களை உள்ளடக்கியிருந்த அக்கால)த் திருஅவையின் முதல் சுதேச ஆயரான ஜேக்கப் ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி.யின்(1901 - 1972) மறைவின் 50 வருடங்களை நெருங்கிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் (17 யூலை 2022) எமது இளையோர் சமூகமும் எதிர்கால சமூகமும் இவரது வாழ்வும் பணியும் பற்றி அறிய வேண்டும் என்பதற்காக விசேடமாகத் தனியார் பாடசாலைக் கல்வியே நல்லொழுக்கத்திற்கு அடிப்படை என்னும் இவரது கொள்கைப்பிடிப்புடனான வாழ்வும் பணியும் ஆறு தலைப்புகளின் கீழ் தொடர்கட்டுரையாகத் தரப்படுகின்றது.**



அருட்பணி சி.ஜே.அன்ரனி பாலா

யாழ். குடாநாட்டின் சனத்தொகைப் பெருக்கம் பற்றிய எதிர்கால அச்சத்தினாலும், தமிழரின் விகிதாசாரத்தைக் குடாநாட்டிற்கு வெளியே தென்பகுதியில் அதிகரிக்கச் செய்ய வேண்டும் என்னும் தமிழரின் எதிர்கால வளர்ச்சி தொடர்பான திட்டத்தினாலுமே இக்கோரிக்கை தமிழ்த் தலைவர்களால் முன் வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம், நல்லூர், திருநெல்வேலி, நெடுந்தீவு, புங்குடுதீவு, வேலணை, பண்டத்தரிப்பு, விளான், சில்லாலை, இளவாலை, தென்மராட்சி, வடமராட்சி மக்களில் படித்தவர்கள் பலர் அரசு தந்த காணிகளில் பல ஏக்கர்களைக் குறைந்த விலையில் சொந்தமாக்கிக் கொண்டு குடியேறினர்.

இவர்களில் பலர் தமது பாரம்பரிய இடங்களையும் கைவிடவில்லை. வன்னி, மன்னார் பெருநிலப்பரப்பில் மேலதிக குடியேற்றங்கள் தோன்றின. இன்று வரை தொடர்கின்ற பெரும்பான்மை, சிறுபான்மையினருக்கிடையேயான மோதல்களின் பிரதான தோற்றுவாய் 1958 இனக்கலவரத்துடனானதாகும். இது பாரிய இடம்பெயர்வைத் தோற்றுவித்தது. பிரித்தானிய ஆட்சியில் இலங்கை, கிளர்ச்சிகள், எதிர்ப்புக்கள், வன்செயல்கள் எதுவும் இல்லாத நாடு என்று சொல்லப்பட்டதாயினும், 1815-1848 வரை பிரித்தானியருக்கெதிரான ஆயுதம் தாங்கிய வெகுஜனப் போராட்டங்களும் 1848-1923 வரை பல்வேறு தொழிலாளர்களின் வேலைநிறுத்தங்களும் இடம்பெற்றன.

இது தவிர நாட்டின் பிரதான இன, சமய மக்களிடையே பதற்றமும், வன்செயல்களும் இடம்பெற்றன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் அரசியல் பொருளாதார ரீதியில் தாங்கள் பின்தள்ளப்பட்டவர்கள் என்று நினைத்த பெரும்பான்மையான சிங்களவரிடையே ஏற்பட்ட சிங்களபௌத்த மறுமலர்ச்சியுடன் பௌத்தர், கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் இந்துக்களிடையே முரண்பாடுகள் ஏற்பட்டன. இது 1883இல் கொழும்பில் நிகழ்ந்த கத்தோலிக்க-பௌத்த கலவரம் 1903 இல் தேவாலயங்கள், இறைச்சிக்கடைகள், தவறணைகள் ஆகியவற்றிற்கெதிராகத் திருப்பப்பட்ட அனுராதபுரக் கலவரங்கள், 1915இல் இடம்பெற்ற சிங்கள முஸ்லிம் கலவரம் போன்ற பல நிகழ்வுகளைத் தோற்றுவித்தன. ஆயினும் விசேடமாக இவரது காலத்தில் 1958இல் இனக்கலவரமாக வெடித்த சிங்கள-தமிழ் முரண்பாடுகளே மிக மோசமான இன்றைய விளைவுகளின் பிறப்பிடமாக அமைந்தன. இவ்வேளை தென்பகுதியில் அச்சநடுக்கத்துடன் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டிருந்த தமிழ் மக்கள் வடபகுதிக்குத் தப்பிவரத் தனது செல்வாக்கால் கப்பல் வசதிகளை ஆயர் எமிலியானுஸ்பிள்ளை அரசின் கெடுபிடிகள் மத்தியில் செய்தமை அலைகடல் துரும்பாகத் தவித்த தமிழ் மக்களுக்கு ஆறுதலாக இருந்தது.

வரலாற்றில் இவ்வாறாக நிகழ்ந்த தொடர் இடம்பெயர்வுகளால் வடக்கு நோக்கி வந்த தென்பகுதியின் இந்திய வம்சாவழித் தமிழரும் ஏனைய இலங்கைத் தழிழரும் மேலதிகமாக இப்பெருநிலப் பிரதேசங்களில் குடியமர்த்தப்பட்டனர்.

இப்புதிய குடியமர்வுகளால் இவ்விடங்களில் புதிய மறைப்பணி நிலையங்களையும் ஆலயங்களையும் உருவாக்குவதற்கு இவர் முன்னுரிமையளித்தார். இப்பாரிய இடம்பெயர்வும் அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற பாடசாலைகள் தேசியமயமாக்கலும் மறுபுறம் இதைத் தொடர்ந்து நிகழ்ந்த இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்க நிகழ்வும் இவரது காலத்தை முன்னெப்போதுமில்லாதவாறு மிகவும் சிக்கலாக்கியது. ஏற்கெனவே ஐரோப்பிய அருட்பணியாளர்களின் மறைப்பணியால் இப்பெருநிலப்பரப்புகளில் ஆலயங்கள் இருந்தன. அன்றைய வவுனியா மாவட்டத்தின் முல்லைத்தீவு, அளம்பில், கொக்கிளாய், வவுனியா, இரணைப்பாலை, மாத்தளன், புதுக்குடியிருப்பு, அன்றைய யாழ்ப்பாண மாவட்டத்தின் கிளிநொச்சி, பூநகரி, குமுழமுனை, நாச்சிக்குடா, வலைப்பாடு, இரணைதீவு, மன்னார் மாவட்டத்தின் முருங்கன், நானாட்டான், அரிப்பு, சிலாவத்துறை, அடம்பன், பரப்புக்கடந்தான், வங்காலை, விடத்தல்தீவு, இலுப்பைக்கடவை, பறப்பாங்கண்டல் முதலிய இடங்களில் ஆலயங்கள் இருந்தன. ஆயினும் இவ் விடங்களின் பௌதிக சூழல், இடத்தூரம் தொழில் அமைப்பு முறைகள் காரணமாக மக்கள் குடியேறிய புதிய குடியேற்றங்கள் மத்தியில் ஆலயங்கள் பல நிறுவப்படவேண்டியிருந்தன.

வவுனியா மாவட்டத்தின் தர்மபுரம், விசுவமடு, உடையார்கட்டு, சுதந்திரபுரம், தேவிபுரம், ஆனந்தபுரம், தண்ணீர் ஊற்று, கூழாமுறிப்பு, மாங்குளம், வவுனிக்குளம் போன்ற இடங்களிலும், யாழ்ப்பாண மாவட்டத்தின் வட்டக்கச்சி, இராமநாதபுரம், கல்மடு, பரந்தன், முரசுமோட்டை, உருத்திரபுரம் போன்ற இடங்களிலும், மன்னார் மாவட்டத்தின் ஓமந்தை, பண்டிவிரிச்சான் உயிலங்குளம், செட்டிகுளம், தம்பனை போன்ற இடங்களிலும் அண்டியுள்ள இன்னும் பல பகுதிகளிலும் புதிய ஆலயங்கள், மறைப்பணி நிலையங்கள் இவரது காலத்தில் கொட்டில் கோவில்களாக அமைக்கப்பட்டன. பங்கு அருட்பணியாளர்களின் மேற்பார்வையில் இவ்வாலயங்களுக்கு அருகில் பாடசாலைகளும் இவரது கண்காணிப்பில் நிறுவப்பட்டமை, இவர் எதிர்கால சந்ததியின் கல்வி வளர்ச்சியில் கொண்டிருந்த அக்கறையைக் காட்டியது.

### பெருநிலப்பரப்பின் கடினமான பணிகள்

இந்த இடங்களில் வாழ்ந்த மக்களும் பணியாற்றிய அருட்பணியாளர்களும், நுளம்பு, பாம்பு, பன்றி, யானை மற்றும் ஏனைய கொடிய காட்டு மிருகங்களாலும், மலேரியா, வாந்தி பேதி போன்ற நோய்களாலும் ஏற்பட்ட உயிர், மற்றும் பயிர் அழிவுகளிலிருந்து தம்மைக் காப்பாற்றும் பொருட்டுப் பல தற்காப்பு முயற் சிகளையும் எடுக்க வேண்டியவர்களாக இருந்தனர். பங்கு மறைப்பணித் தளங்களிடையே இருந்த தூரம் மிகவும் கூடியதாக இருந்தது. இவ்வருட் பணியாளர்களின் பணிகள் பல தரப்பட்டவைகளாக இருந்தன. மக்களின் வசதிக்கேற்பத் திருவழிபாடுகளை ஒழுங்குபடுத்துவது, பிள்ளைகளை கூட்டிச் சேர்த்து அவர்களின் இடங்களில் மறைக்கல்வி கற்பிப்பது, பாடசாலைகளை நிர்வகிப்பது, ...

(தொடரும்...)

## தமிழ்க் கிறிஸ்தவத்தின் இறை அனுபவ வளர்ச்சி


நான் குருவாகி ஓர் இறையியலாளராக
உருவெடுத்ததன் பின்பு, பெரும்பாலும்
ஆசிய நாடுகளின் அடிப்படையிலும்,
எங்களது சொந்தத் தமிழ் சூழலிலும், எனது இறையியல்
சிந்தனைகளை உருவாக்கியிருக்கின்றேன்.
அவற்றை இங்கே தருகின்றேன்.

17

- *அருட்பணி எஸ். ஜே. இம்மானுவேல்*

### அத்தியாயம் 8

*(சென்ற இதழ் தொடர்ச்சி...)*



### 8.8 தமிழ்த் திருஅவைகள் தமிழ் மக்கள் மத்தியில் ஒளியாகவும் உப்பாகவும் செயற்பட வேண்டும்

ஒளி சிறியதாக இருந்தாலும், அதன் சக்தி சகல திசைகளிலும் பரவி உண்மையை வெளிப்படுத்தி, உண்மையைத் தெளிவுபடுத்திக் காட்டும். அந்த ஒளி இருளை அகற்றும்! இருளை வெல்லும்! அறியாமையை அகற்றும்! உண்மையை நிலைநாட்டும்! அநீதியை ஒழிக்கும்! நீதியை நிலைநாட்டும். இதுதான் கிறிஸ்துவின் பிரசன்னம். இதைத்தான் திருஅவைகளும் தங்கள் தங்கள் சூழலிலே செய்யக் கடமைப்பட்டிருக்கின்றனர். இந்தப் பணியை நாங்கள் எவ்வளவிற்குச் செய்திருக்கின்றோம் அல்லது எவ்வளவிற்கு செய்யப்படுகின்றது என்பது கேள்விக்குறியாக இருக்கின்றது.

ஏனென்றால் எங்களுடைய கிறிஸ்தவம் சிற்சில அமைப்பு மாற்றங்களைச் செய்தாலும் இன்னும் எவ்வளவோ மாற்றங்களைச் செய்தால்தான் அது கிறிஸ்துவின் ஒரு குழுமமாக, கிறிஸ்துவுக்குச் சாட்சியம் கொடுக்கும் சபையாக, கிறிஸ்துவைப்போல் ஒளி - சக்தி கொடுக்கும் சபையாகவும் இருக்க முடியும்.

இதேவிதத்தில், கிறிஸ்து நானே உப்பு என்றார். எம் எல்லோருக்கும் உப்பைப் பற்றிய அனுபவம் நிறைய இருக்கின்றது. ஒரு சிறு அளவு உப்பு, முழு உணவின் சுவையை மாற்றுகின்றது. உணவிற்கு தேவையான பல பொருட்கள் இருந்தாலும், உப்பு இல்லையேல், சுவையற்ற உணவாகி விடுகின்றது. அத்துடன் இயேசு விண்ணரசு ஒரு கடுகு வித்துக்கு ஒத்தது என்றார். எமது சமுதாயம் பல விதத்தில் திறமையாகவும் அழகாகவும் இருக்கலாம். ஆனால் எமது சமுதாயத்தில் மனிதர்கள் மனிதர்களாக, இறைவனின் பிள்ளைகளாக, சம உரிமை கொண்ட சகோதரர்களாக, சமாதானத்துடன் வாழ நாங்கள் செய்ய வேண்டிய பணி, ஒளியைப் போலவும் உப்பை போலவும், வித்தைப் போலவும், மிகச் சிறிய, ஆனால் இறையரசைக் கட்டும் உன்னத பணிகள்.

### 8.9 பிற மத சகோதரருடன் ஒன்றித்து, சமூகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதிலும், அநீதிகளை எதிர்ப்பதிலும் செயற்படவேண்டும்.

நான் பங்கெடுத்த ஆசியத் திருஅவை ஆயர்களின் இறையியலாளர் குழு (Theological Advisory Committee of the FABC) 1986 ஆம் ஆண்டு தனது முதற் கவனத்தை இவ்விடயத்தின் மேல் செலுத்தியது. இக்குழு சர்வ மத உரையாடல் என்ற தலைப்பில் 6 அறிவுரைகளை வழங்கியிருந்தது. நாம் தமிழர், கிறிஸ்தவர்களாக மாறுவதற்கு முன், இறைவன் எங்களை மனிதராக, அதிலும் தமிழராகப் படைத்தார். நாம் தமிழ் மனிதர்களாவதற்கு எமக்கு மொழி, கலை, கலாசாரம் அனைத்தும் இனாமாக இறைவனால் கொடுக்கப்பட்டவை. எமது முன்னோர் இயற்கையுடன் இணைந்து, இறைவனைத் தேடியவர்கள். தாங்கள் பெற்ற இறைவெளிப்படுத்தல்களை வெவ்வேறு விதத்தில் தனிஅனுபவமாகப் பெற்று உடன் தமிழர்களுடன் பகிர்ந்து, அவையின் அடிப்படையில், காண முடியாத சக்திகளுக்குப் பயந்து பணிந்து நடக்க முயன்றனர். சிலர் விசேட அனுபவம் பெற்றவர்களாகத் தமது ஞானத்தை வெவ்வேறு வழிகளில் வெளிப்படுத்தினர். வழிபாடுகள் செய்தனர். இப்படியாக மதங்கள் வளர்ந்து, திரண்டு, இந்தியாவின் மக்கள் மத்தியில் இந்து மதம் பரவியது.

தமிழர் மத்தியில் இந்து மதம், சைவமாக இடம் பிடித்துள்ளது. இந்நிலையில்தான் கிறிஸ்தவத்தில் மாத்திரமே மீட்பு, என்று ஐரோப்பிய மறைபரப்பாளர்கள் தங்களுடைய விசுவாசத்தில் கூறியதை, தமிழர்கள், முழுமையாக நம்பி, கிறிஸ்தவர்களாகினர். அத்தோடு, இந்து சைவ மதங்களைப் பற்றி, ஐரோப்பியர் தங்கள் விசுவாசத்தில் கூறியவற்றை ஏற்று, சில தவறான வெறுப்புடன், இந்து சைவ மக்களைக் கணித்தனர்.

ஆனால் இன்று 2ஆம் வத்திக்கான் சங்கம், பிற மதங்களுக்கும் இரட்சணிய முக்கியத்துவம் இருக்கின்றது என்பதை ஏற்று விளக்கி இருக்கின்றது. ஆகையால் கிறிஸ்தவர்களாகிய நாம் இந்து சைவ மதத்திற்கு உரிய மதிப்பளித்து, தேவையற்ற சச்சரவுகள் வெறுப்புகளை விலக்கி, அவைகளுடன் தேவையான உறவுகளை ஏற்படுத்தி, தமிழ் மக்களின் முழுமனிதப் பிரச்சினைகளுக்கும் முகங்கொடுக்க வேண்டுமென்று வத்திக்கான் சங்கம் விரும்புகின்றது, ஊக்குவிக்கின்றது.

நாங்கள் எங்கு வாழ்கின்றோமோ, அங்கே இருக்கும் மதங்களின் சகோதரருடன் உறவு ஏற்படுத்தி, ஒன்றாக மனித சமூகப் பிரச்சினைகளை அனுபவிப்பவர்கள் சார்பாக, அநீதிகளுக்கு எதிராகச் செயற்பட வேண்டுமென்றும், சங்கம் எமக்கு அறிவுறுத்துகின்றது. இந்தப் பார்வையில்தான் நான் 1986-1996 ஆண்டுகளில் யாழ்ப்பாணம் 115, 4ம் குறுக்குத் தெரு வீதியில் நற்சமூக நடு நிலையத்தை 4 மதத் தலைவர்களின் அனுசரணையுடன் நடத்தினேன். தமிழ் கிறிஸ்தவர்கள் திரு அவைகளுக்குள்ளே செய்ய வேண்டிய புதுப்பித்தலுக்கான மாற்றங்களை பற்றிச் சிந்தித்தால் போதாது. மிக முக்கியமாக, எம்மைச் சூழ்ந்திருக்கும் தமிழ்ச் சமு தாயத்தை முன்னேற்ற, மனித சமுதாயப் பணிகளில் எல்லோருடனும் இணைந்து செயற்பட வேண்டும்.

(தொடரும்....)

# சுவிற்சர்லாந்தின் வித்து ஒன்று

# திருச்சிலுவையின் சொத்தாகியதுடன் திருச்சிலுவையை சொத்தாக்கியது

“சிலுவையில் தான் இரட்சணியம்” என்பதை விருதுவாக்காகக்கொண்டு இறை இயேசுவின் அன்புப் பணியை உலகளாவிய ரீதியில் 15க்கு மேற்பட்ட நாடுகளில் பறைசாற்றிக் கொண்டிருக்கும் திருச்சிலுவைத் துறவற சபையின் துணை ஸ்தாபகரும் 19ஆம் நூற்றாண்டின் சிறந்த அல்லது துறவு பூண்ட பெண்மணி எனப் பெயர் பெற்றவருமான அன்னை பேர்ணாடா கெய்ம்காட்னரின் (Mother Bernarda Heimgartner) 200வது பிறந்த தினத்தை நினைவு கூர்ந்து இறைவனுக்கு நன்றி கூறி மகிழும் இவ்வேளையில் அன்னையின் வாழ்க்கைச் சுவடு-களைப் பற்றி அறிந்திருப்பது சாலச் சிறந்ததாகும்.

18ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் முதலாளித்துவ, அரசியல், சர்வாதிகார ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்து மக்களாட்சி சகாப்தம் உருவாக வழிசமைத்துக் கொடுத்ததுடன் மக்கள் புரட்சி மற்றும் அரசியல் புரட்சியாக ஆரம்பித்து சமுதாயப் புரட்சியாக உருவெடுத்து ஐரோப்பிய வரலாற்றில் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற மூன்று கொள்கைகளை உலகிற்கு அளித்தது பிரான்சியப் புரட்சி என்றால் அது மிகையாகாது என்றே கூறலாம்.

பிரான்சியப் புரட்சி ஏற்பட்டு ஐரோப்பாவையே கதிகலங்கச் செய்து கொண்டிருந்த காலப்பகுதியில் கத்தோலிக்க மதத் தலைமைப்பீடங்கள் சிதறடிக்கப்பட்டு சின்னாபின்னமாகிப் போக, காலத்தின் மாற்றத்திற்குள் மக்களின் மனங்களும், புயற்காற்றிலே அகப்பட்ட நாணற்புல்லைப் போல் அடிபட்டு, ஒழுக்க விழுமியங்கள்சீரழிக்கப்பட்டதுடன், ஐரோப்பிய தேசத்தில் ஆயுத வன்முறைகள் அரங்கேறி இரத்தவெள்ளம் சிவப்புக் கம்பளம் விரித்தாற்போன்று ஆறாகப் பாய, மக்கள் வாழ்க்கையில் நம்பிக்கை இழந்தவர்களாக, இறைவிசுவாசத்தில் தளம்பியவர்களாகத் தம் வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருந்தார்கள். அரசியல், பொருளாதாரம், சமயம், பண்பாடு ஆகிய அனைத்துத் துறைகளிலும் அனைத்து விடயங்களும் கூறுபோடப்பட்டுக் கேள்விக்குறியாகி நின்றது.

ஆயிரம் ஆண்டு காலமாக விவசாயிகளின் பக்தி நிறைந்த உதடுகளால் முத்தமிடப்பட்ட சிலுவை காலால் மிதிப்பதற்குக் கூடத் தகுதியற்ற ஒன்றாக வெறுத்தொதுக்கப்பட்ட காலத்தில், கத்தோலிக்க மதம் ஐரோப்பிய தேசத்தில் ஏன் உலக அரங்கில் கூட வேண்டாத ஒன்றாக முத்திரை குத்தப்பட்ட காலத்தில், எது வேண்டாத ஒன்றாகக் கருதப்பட்டதோ அதன் மகிமையைப் பறைசாற்றுவதற்காகவே தன் வாழ்வையே அர்ப்பணித்து, அந்தச் சிலுவையையே தன் வாழ்வின் அணிகலனாக அணிந்து துன்பத்தின் மூலமே எமக்கு மீட்புக் கிடைக்கும் என்பதை உலகிற்குப் பறைசாற்ற பிரான்சியப் புரட்சியின் வீரக் குழந்தையாகப் பிறந்தவள் தான் எம் அன்னை பேர்ணாடா.

இயற்கை வளம் நிறைந்த இன்பவனமாக இறைவன் உருவாக்கிய இந்த எழில் பொங்கும் உலகில் இயற்கை அழகினால் உள்ளங்களைக் கொள்ளை கொள்ளும் சுவிற்சர்லாந்து நாட்டின் பசுமையான வயல்வெளிச் சோலைகள் நிறைந்த Canton Argargu என்னும் நகரில் உள்ள பிசிலிஸ்பாக் என்னும் சிற்றூரில் அன்னா மரியா ரூப் மற்றும் ஹென்றி யோசப் கெய்ம்காட்னர் தம்பதியினரின் ஆறு குழந்தைகளில் நான்காவது குழந்தையாக 1822 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 26ஆம் திகதி மரிய அன்னா கெய்ம்காட்னர் (Maria Anna Heimgartner) பிறந்தார்.

இறையன்பும் பிறரன்பும் நிறைந்து இறைவிசுவாசத்தில் மிகுந்து அயலவர்களுக்குச் சிறந்த முன்னுதாரணமாக விளங்கிக் கத்தோலிக்க அற, ஆன்மீக வாழ்வை எடுத்துக்காட்டிய அந்தக் குடும்பத்தில் கருவாக உருவாகிக் குழந்தையாகத் தவழ்ந்து மழலை மொழி பேசித் தள்ளாடி நடைபயின்று மரிய அன்னா வளர்ந்தபோது ஐரோப்பிய மக்கள் அனுபவித்த பிரான்சியப் புரட்சியின் எதிரொலிகள் இவரது குடும்பத்தையும் விட்டுவைக்கவில்லை. வறுமையின் கோரப்பிடிக்குள் சிக்கித் தவித்த போதும் இறைவன் மீது கொண்ட உறுதியான விசுவாசத்தால் இவரது குடும்பம் வாழ்க்கையின் சவால்களை மனத் தைரியத்துடன் எதிர்கொண்டு சென்றது.



**“வறுமையிலும் வாழத் தெரியும் வளமையிலும் வாழத் தெரியும்”** என்ற புனித பவுலடியாரின் கூற்றுக்களைத் தானும் ஏற்றவளாக, குழந்தைப் பருவம் முதல் வறுமையின் வடுக்களைத் தானும் சுமந்து அதனூடே தன்னுடைய எதிர்கால வாழ்க்கையின் சவால்களுக்கு உறுதியாக முகங்கொடுத்து வெற்றி கொள்ளக்கூடிய வகையில் இறைவனால் தயார்ப்படுத்தப்பட்ட மரிய அன்னா, தனது சிறுவயது முதலே சகோதர அன்பிலும் இறை நம்பிக்கையிலும் விசுவாசத்திலும் பக்தி முயற்சிகளிலும் தாழ்ச்சியிலும் எளிமையிலும் சிறந்தவராகத் தன்னை இனங்காட்டிக் கொண்டார். இவருடைய பள்ளிப் பருவத்தில் இவரின் பங்குத்தந்தையாக இருந்த அருட்தந்தை ரோனர் மரிய அன்னாவிடம் விளங்கிய இளமைத் துடிப்பையும், விசுவாசத்தையும், பிறர் நலப் பணியில் ஏற்பட்ட தணியாத தாகத்தையும், கடின உழைப்பையும், சிந்தனை ஆற்றலையும் இனங்கண்டு கொண்ட அதேவேளை அவர் எதிர்காலத்தில் ஒரு துறவியாகஉருவாகக் கூடிய மனநிலையில் இருப்பதையும் உய்த்துணர்ந்து கொண்டார்.

மரிய அன்னாவிற்கு 14 வயதான வேளை எதிர்பாராத துன்பியல் சம்பவம் ஒன்றை அவள் தன் வாழ்வில் சந்திக்க வேண்டியேற்பட்டது. வறுமையின் கொடுமையிலும் தன்னுடைய ஆறு குழந்தைகளுக்கும் சிறந்த கல்வியைக் கொடுத்து அவர்களுக்கு சிறந்த ஒரு எதிர்காலத்தை பரிசளிக்க வேண்டும் என்ற கனவுடன் பாதணி உற்பத்தித் தொழிலில் பாடுபட்டுழைத்த பாசமிகு தந்தையின் திடீர் இழப்பு மரிய அன்னாவின் குடும்பத்தினரால் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாக இருந்ததுடன், உளரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்து எதிர்நீச்சல் போட முடியாமல் தத்தளித்த போது குடும்பத்தின் மீள் எழுச்சிக்காக, முன்னேற்றத்திற்காக மரிய அன்னா தன்னை முற்றுமுழுதாக அர்ப்பணித்தாள்.

இக்காலகட்டத்தில் பிரான்சியப் புரட்சியின் பிரதிபலிப்பாக, சீரழிந்து சென்று கொண்டிருந்த இளையோரின் வாழ்வில் அக்கறை கொண்டவராக, அவர்களின் வாழ்வில் ஆன்மீக சமூக ஒழுக்கவியல் மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்காக அர்ப்பணிப்புடன் பல செயற்பாடுகளை முன்னெடுத்துக் கொண்டிருந்த Capuchin துறவற சபையைச் சேர்ந்தவரும் எமது சபையின் ஸ்தாபகருமான அருட்தந்தை தியோடோசியஸ் புளோரன்ரனி இளம் பெண்களின் கல்வி ஆன்மீகம் மற்றும் ஒழுக்கவியலில் முன்னேற்றத்தை ஏற்படுத்தும் நோக்கில் Baden என்னும் இடத்தில் இளம் பெண்களுக்காக ஒரு விடுதியை ஆரம்பித்தார்.

மரிய அன்னாவின் தந்தையின் இழப்பின் பின்னர் இவர்களது குடும்பத்தின் மீது மிகுந்த அக்கறை கொண்டிருந்த இவர்களது பங்குத்தந்தை அருட்தந்தை ரோனர் அருட்தந்தை தியோடோசியஸால் Badenஇல் ஆரம்பிக்கப்பட்ட இவ்வில்லத்தைப் பற்றிக் கேள்விப்பட்டு மரிய அன்னாவின் எதிர்கால முன்னேற்றத்தைக் கருத்திற்கொண்டு அவரை அவ்வில்லத்திற்கு அனுப்பி வைத்தார். இவ்வாறாக மரிய அன்னாவின் வாழ்வில் முக்கிய நபர்களை (அருட்தந்தை தியோடோசியஸ் புளோரன்ரனி மற்றும் மரியா அன்னாவின் துறவற உருவாக்கல் பயணத் தோழிகள்) சந்திக்க வைத்து, முக்கிய முடிவுகளை எடுக்க அவரைத் தூண்டிய இந்த இல்லம் தான் மரிய அன்னாவின் துறவற வாழ்விற்கான நுழைவாயிலாக சிறப்பிடம் பெறுகின்றது. இவ்வாறாக ஏனையோருடன் இணைந்து சந்தோசமாக இவ்வில்லத்தில் பயிற்சிகளை மேற்கொண்டிருந்த போது பிரான்சியப் புரட்சியின் விளைவாக சமுதாயத்தில் ஏற்பட்ட ஒழுக்க சீர்கேடுகளை சீர்செய்யும் நோக்குடன் பின்தங்கிய பிரதேசங்களுக்குச் சென்று இளந் தலைமுறையினருக்குக் குறிப்பாக இளம் பெண்களுக்கு ஒழுக்கவியல் கல்வியைக் கற்பிக்கக்கூடிய ஆற்றலுள்ளவர்களைத் தேடிக் கொண்டிருந்த அருட்தந்தை தியோடோசியஸ், மரிய அன்னா, அன்னா கிரேமர் மற்றும் வல்பேர்கா ஆகிய இளம்பெண்கள் மூவரும் இறைதிட்டத்திற்கேற்ப பிறருக்காகத் தம் வாழ்வையே அர்ப்பணிக்கக் கூடிய மனங்கொண்டவர்களாக துறவற வாழ்வில் நாட்டங்கொண்டவர்களாக பயிற்சி யில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதை இறைவனின் துணையால் இனங்கண்டு கொண்டதுடன் மட்டுமல்லாது அவர்கள் மூலம் அதை உறுதி செய்து கொண்டார். நல்லொழுக்கத்துடனும் சிறந்த நற்பண்புகளுடனும் இறைவிசுவாசம் மிக்கவர்களாக மகிழ்ச்சியாகப் பயிற்சிகளை மேற்கொண்டிருந்த வேளையில் அந்த இல்லத்தில் அவர்கள் அனுபவித்த மகிழ்ச்சியானது நீண்ட காலத்திற்குத் தொடரவில்லை என்றே கூறலாம். பிரான்சியப் புரட்சியின் மிக மோசமான விளைவாக கத்தோலிக்கர்களுக்கு எதிராகப் பல வன் முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டதுடன் கத்தோலிக்க மதத் தலைவர்கள் மீதான வெறுப்புணர்ச்சியால் ஆலயங்களும் குருமடங்களும் துறவற இல்லங்களும் மூடப்பட்டு சிதறுண்டு போயின. இந்த இக்கட்டான சூழ்நிலையில் அருட்தந்தை தியோடோசியஸ் இம்மூன்று யுவதிகளின் உதவியுடன் தாம் தொடங்க விருந்த புதிய பணியை முன்னெடுக்கும் நோக்குடனும், இவர்களின் எதிர்கால இலட்சியத்தை நனவாக்கும் கனவுடனும் இறைதுணையில் நம்பிக்கை வைத்தவராக இம்மூவரையும் பயிற்சிகளைத் தொடர்வதற்காக சொந்த நாட்டை விட்டு ஜேர்மன் நாட்டின் Freiburg என்னும் நகரத்திற்கு அனுப்பி வைத்தார்.

> திருச்சிலுவை கன்னியர் சபை யாழ்ப்பாணம்

இவர்கள் ஏறக்குறைய இரண்டு வருடங்கள் அங்கு தங்கியிருந்து இவர்கள் தமது பயிற்சிகளை நிறைவுசெய்த இக்காலப்பகுதியில், The Sisters of Divine Providence துறவற சபையினரின் துறவற அருள்வாழ்வு மற்றும் மென்மையான சேவை என்பவற்றால் கவரப்பட்ட அருட்தந்தை தியோடோசியஸ் இம்மூவரையும் அத்துறவற சபையில் இணைக்கும் நோக்குடன் துறவற உருவாக்கல் பயிற்சிக்காக அங்கே அனுப்பி வைத்தார். இச்சபையில் இணைந்து தமது உருவாக்கல் பயிற்சியின் ஆரம்பக் கட்டங்களை பூர்த்தி செய்த இவர்கள் Sr. Bernarda Heimgartner, Sr. Feliciana, Sr. Cornelia எனத் தமது பெயர்களை மாற்றிக் கொண்டதுடன் நவசந்நியாசப் பயிற்சிக்காக பிரான்ஸ் நாட்டின் Ribeauville என்னும் இடத்திற்கு அனுப்பப்பட்டனர். உருவாக்கல் காலத்தில் பல்வேறுபட்ட துன்பங்களும் சவால்களும் பரிசாகக் கிடைத்த போதும் இறைதுணையால் அவற்றை வெற்றி கொண்டு தமது பயிற்சிகளின் நிறைவுக் கட்டத்தை நோக்கிப் பயணித்த போது சவிற்சர்லாந்து நாட்டின் மென்சிங்கனில் துறவிகளின்சேவை அவசியமாக அவசரமாகத் தேவைப்பட்ட அக்காலத்தில் தந்தை தியோடோசியஸ் காலத்தின் தேவையை உணர்ந்தவராக முதல் அர்ப்பணத்தை தொடர்ந்து இவர்கள் மூவரையும் அங்கு அனுப்புவதற்குத் தீர்மானித்தார்.

இம்மூன்று சகோதரிகளும் முதல் அர்ப்பணத்திற்காகத் தம்மைத் தயார்ப்படுத்திக் கொண்டிருந்த அந்நாட்களில் தந்தை தியோடோசியஸ் தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டவராக குறுகிய காலத்தில் மிகவும் பிரபல்யமாக்கப்பட்ட திருச்சிலுவையைத் தாங்கிய புதியதொரு துறவற சபையை உருவாக்கத் தூண்டப்பட்டார். அந்த வகையில் இம்மூன்று சகோதரிகளையும் புனித அசிசியாரின் மூன்றாவது கட்டளையின் கீழ் அறிமுகப்படுத்த முடிவெடுத்து “நீங்கள் எப்பொழுதும் சிலுவையில் அறையப்பட்ட இயேசுவை எல்லாவற்றிற்கும் மேலாக அன்பு செய்கின்றீர்களோ அப்பொழுது முதல் உண்மையான அருட்சகோதரிகளாக இருப்பீர்கள்” என்ற வாசகத்துடன் அவர்களுக்கு இது தொடர்பாகக் கடிதம் மூலம் தெரிவித்து அவர்களின் முழுச்சம்மதத்தையும் பெற்றுக் கொண்டு 1844 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 16ஆம் திகதி இம்மூவரும் தமது முதல் அர்ப்பணத்தை மேற்கொள்ள சகல ஒழுங்குகளையும் செய்தார்.

புதிய துறவற சபையின் முதல் அருட்சகோதரிகளாக அர்ப்பணத்தை மேற்கொண்ட இவர்கள், மென்சிங்கனில் ஆயுத வன்முறைகளால் அலைக் கழிக்கப்பட்டு இருளே சூழ்ந்த வாழ்வுக்குள் சிக்குண்டு சிதறுண்டவர்களாக ஆயனில்லா ஆடுகளாக அலைந்து திரிந்த மக்கள் மத்தியில் ஆழமான நம்பிக்கையை ஏற்படுத்தும் நோக்கில் காலத்தின் தேவையே இறைவனின் சித்தம் என்பதை ஏற்றுக் கொண்டவர்க ளாக புதிய சபையின் தலைவியாக அன்னை பேர்ணாடாவை தந்தை தியோ டோசியஸ் நியமித்ததுடன் அவரின் தலைமையில் முதல் அர்ப்பணத்தின் அடுத்த நாளான ஐப்பசி 17ஆம் திகதி மென்சிங்கனுக்கு அனுப்பப்பட்டார்கள்.

பணிவாழ்வை ஆரம்பித்த அன்னை பேர்ணாடா கல்வியில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்த மக்களைத் தேடிச்சென்று அவர்களின் அறிவை மேம்படுத்த உழைத்து விசுவாசத்தில் ஆழப்படுத்தினார். “கிறிஸ்து என்னை ஆட்கொண்டதற்கான நோக்கம் நிறைவேறுவதற்காகவே தொடர்ந்து ஓடுகிறேன்” என்ற பவுலின் வார்த்தையைத் தனதாக்கிக் கொண்டவாறு பயணித்த அன்னை பேர்ணாடாவின் எளிமையான வாழ்க்கையும் திருச்சிலுவையின் மீது கொண்ட அளவற்ற பக்தியும் பல இளம் உள்ளங்களின் இதயக்கதவுகள் இறைவனை நோக்கித் திறக்கப்பட வழி வகுத்தது என்றால் அது மிகையாகாது.

(தொடர்ச்சி 7ம் பக்கம்)

## சுவிற்சர்லாந்தில் ஒரு முத்து....

(6ம் பக்கத் தொடர்ச்சி...)

சிலுவையில் தான் மீட்பு உண்டு என்ற விருதுவாக்கை வாழ்வாக்கி சிலுவையின் மகிமைக்குச் சான்றாக விளங்கிய அன்னையின் பணிவாழ்வினால் கவரப்பட்ட இளம் உள்ளங்களின் தொகை பெருகித் திருச்சிலுவைத் துறவறசபை அருட்சகோதரிகளின் எண்ணிக்கை அதிகரித்ததோடு அவர்களின் பணிவாழ்வும் விரிவடைந்து சென்றது. “நோயற்றவர்க்கு அல்ல நோயுற்றவர்க்கே மருத்துவர் தேவை” என்ற இறை இயேசுவின் வார்த்தையை அன்னை தனதாக்கி, உளரீதியிலும் உடல் ரீதியிலும் புண்பட்டுக் கிடந்த மக்களின் வாழ்வைப் பண்படுத்தவென, காலத்தின் தேவைக்கேற்ப எங்கெல்லாம் பணி அவசியமாகத் தேவைப்பட்டதோ அங்கெல்லாம் விரைந்து சென்று பணியாற்றத் தனது அருட்சகோதரிகளை ஆசிரியர்களாக மட்டுமன்றி சீர்திருத்தப்பள்ளிகளுக்கும் வைத்தியசாலைகளுக்கும் பணிசெய்வதற்காகப் பல்வேறு நாடுகளுக்கு அனுப்பி வைத்தார்.

எதையும் தாங்கும் இதயமும், புத்தாக்கச் சிந்தனையும், ஆர்வம்மிக்க தேடலும், கடின உழைப்பும் கொண்டு இளம் வயது முதலே தலைமைப் பொறுப்பை ஏற்று சபையை வழிநடத்தி வந்த அன்னையின் உண்மையான அர்ப்பணத்திற்கும், பணியின் தாகத்திற்கும், மனதின் துடிப்பிற்கும் ஏற்ற வகையில் பணி செய்த அன்னை பேர்ணடாவின் உடல் நிலை இளம் வயதிலேயே சிறிதுசிறிதாகத் தளர்ந்து 1861 இல் மிகவும் கவலைக் கிடமான போது இறைவனின் வழிநடத்தலில் தனது முழுநம்பிக்கையையும் வைத்தவராக தான் யாருக்காக தனது வாழ்க்கையை அஉப்பணித்தாரோ அந்த இயேசுக் கிறிஸ்துவின் அன்பும் இரக்கமும் என்றும் சபையின் வளர்ச்சிக்கும் அது உருவாக்கப்பட்டதன் நோக்கத்திற்கும் அரணாக விளங்கும் என்ற நம்பிக்கையில் இறைகரத்தில் சபையை ஒப்படைத்து தனது உடல்நிலையின் இயலாமையையும் வலுவின்மையையும் உணர்ந்தவராக சிறந்த ஓர் எதிர்காலத்தைக் கட்டியெழுப்ப வேண்டிய தன் அவசியத்தைக் கருத்திற் கொண்டு தன்னுடைய தலைமைத்துவத்திற்குப் பக்க பலமாக இருந்த Sr. Salesia Strickler என்பவரை சபையின் புதிய தலைவியாக தெரிவு செய்ததுடன் உடல்நிலை மேலும் பலவீனமடைந்து கொண்டே செல்ல இறைவனுடன் இரண்டறக்கலந்துவிடத் தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டிருந்த போது 1863 ஆம் ஆண்டு மார்கழி 13ஆம் திகதி பிற்பகல் 6.30 மணியளவில் தன்னைப் படைத்தவர் கரத்தில் தான் படைக்கப்பட்டதன் நோக்கத்தை நிறைவு செய்து விட்ட உளம் நிறை நன்றியுணர்வுடன் தன் ஆன்மாவை ஒப்படைத்து இவ்வுலகில் இருந்து அமைதியாக விடை பெற்றுச் சென்றார்.

திருச்சிலுவைக் கன்னியர் சபையின் வேர்கள் ஆழமாய் வேரூன்றி அகன்று விரிந்த விருட்சமாய் மாறுவதற்கு மூலைக்கல்லாக இருந்த அன்னையின் நல்லுடல் 1863 மார்கழி 16ஆம் நாள் மண்ணுலகில் விதைக்கப்பட்டது. சிலுவையில் தான் மீட்பு என்பதில் முழுநம்பிக்கை கொண்டு வாழ்ந்த எம் அன்னை பேர்ணாடாவின் நல்லுடல் வைக்கப்பட்டிருக்கும் துய கல்லறையில் அவருடைய வாழ்க்கையை இரத்தினச் சுருக்கமாக எடுத்தியம்பும் வகையில் பொறிக்கப்பட்டிருக்கும் சிலவரிகளை இன்றும் காணக்கூடியதாக உள்ளது.

*She choose the Cross*
*She bore the Cross*
*She triumphed in the Cross*




# என் கேள்விக்கென்ன பதில்!

அருட்பணி செ. அன்புராசா

*(அமலன், யாழ்ப்பாணம்)*

**கேள்வி: சிலவற்றின் அல்லது சிலபேரின் அருமை பெருமைகளை அறியாது சிலர் நடந்துகொள்கின்றார்கள்? இவர்களை என்ன செய்யலாம்?**

**ப:** அமலன், ஒருதடவை நடிகர் எம். ஆர். இராதா தனது விலையுயர்ந்த காரை வீட்டின் முன்பாக நிறுத்தி வைத்திருந்தார். அந்தவழியாக வந்த நாயொன்று அதன்மீது சிறுநீர் அடித்துவிட்டுச் சென்றது. இதனைப் பார்த்த நடிகர் மென்மையாகச் சிரித்துக்கொண்டார். இதனை அவதானித்த அவரின் உதவியாளர், “ஐயா, நாயை விரட்டிவிடாமல் சிரித்துக் கொண்டிருக்கின்றீர்கள்!” என்று கூறினார். அதற்கு எம். ஆர். இராதா, ‘அந்த நாய், அதன் அறிவிற்கு எட்டியதைச் செய்கின்றது. அதற்கு இக்காரின் மதிப்புத் தெரியாது, அதுபற்றிச் சொன்னாலும் அதற்குப் புரியாது’ என்றார். இப்படித்தான், நம்முடைய வாழ்க்கையிலும் சில மனிதர்கள் வந்து போவார்கள்! நமது மதிப்பை அறியாத அவர்கள், நம்மை அவமானப்படுத்துவார்கள், கிண்டல் செய்வார்கள், நமது நற்பெயரைக்கூடக் கெடுப்பார்கள். அந்த நாய்களுக்கு நமது மதிப்புத் தெரியாது,அதுபற்றிச் சொன்னாலும் அவர்களுக்குப் புரியாது! ஆகவே, அமலன் சிரித்துக்கொண்டே அவைகளைக் கடந்துசெல்ல வேண்டியது தான்!

*(அன்ரன், யாழ்ப்பாணம்)*

**கே: சமஷ்டியை நிகழ்ச்சி நிரலில் முன்வைத்து அதுபற்றிக் கலந்துரையாடுவதற்குத் தமிழ்த் தேசயக் கூட்டமைப்பு ஏனைய தமிழ்க் கட்சிகளுக்கு விடுத்த அழைப்பைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்குத் தலைமைதாங்கும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வரவேற்றிருப்பது தமிழ்க்கட்சிகள் ஓரணி யில் நின்று பேச்சுவார்த்தையில் ஈடுபட நல்ல தருணமாகக் கொள்ளலாமா?**

**ப:** ‘ஐயோ ராசா, இந்தக் கட்டத்திலயாவது ஒன்று சேர்ந்து, ஒண்டா நிண்டு, கதைச்சுக் கிதைச்சு ஒரு முடிவுக்கு வாங்கோடா ராசா!’ என்று ஒரு பெரிய வர் இன்றைய நம் தமிழ் அரசியல் தலைவர்கள் - தலைமைகள் குறித்துச் சாதாரணமான வார்த்தைகளில் குறிப்பிட்டது உங்கள் கேள்விக்கு விடையாக இருக்கும் என எண்ணுகின்றேன். சரியா அன்ரன்!

*(மல்லிகா, முல்லைத்தீவு)*

**கே: வருகின்ற ஆண்டுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்வைத்துள்ள வரவு செலவுத் திட்டத்தைப் பார்த்தீர்களா? எப்படி இருக்கின்றது?**

**ப:** வரவையே குறிப்பிடத்தக்க விகிதாசாரத்தில் காட்ட முடியாத அரசு பாதுப்புச் செலவீனமாக நாற்பத்தொரு ஆயிரம் கோடி ரூபாவை ஒதுக்கி யிருக்கின்றது! அதாவது 35 வீதம் பாதுகாப்புச் செலவீனத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் இந்த நாடு, நாடாகவா இருக்கும்! கட்டப்பொம்மன் கூறியது போல, ‘நாய்களும் பேய்களும் நயவஞ்சகப் பூனைகளும்’ நிறைந்த நாடிது!

## ஸப்த அகவைதனில் நிஸப்தமாக அடிபதிக்கும் ஆயனே வாழ்க

இசைதனில் பயணிக்கும் ஸப்தஸ்வரம் போல்
இறைபணியின் ஸப்த அகவையில் அடிபதித்து
இனிதே பயணிக்கும் எம் மறை ஆயனே
இசை ஆசீர் பெருக வாழ்த்துகின்றோம்.

ஆவியின் அருளால் அமைந்த ஆயர் பணியில்
ஆன்மீகமதை அடித்தள நோக்காக்கி
ஆறாண்டுகள் அரும்பணியில் ஆர்வமுடன்
ஆலய மந்தைகளின் உரிமைக்காய் உழைத்தே
ஆயனாய் திகழ்ந்தீர் அறுவடைக்கள இலக்கில்

இனப்பிளவுகளும் வன்முறை வாதங்களும்
இருண்ட யுகமாக்கும் போதையில் பாதகமும்
இக்கால இனத்தின் வாழ்வியலைத் தோற்கடிக்க
இறைவார்த்தை ஒன்றே வெல்லும் ஆயுதமாக்கி
இணைந்து நின்றீர் மேய்ப்புப் பணிதனில்

நற்செய்தியினை நம்பிக்கைக் கீற்றாக்கி
நானிலத்தில் சாதிப்பீர் நாயகன் அரசினை
நற்பணியாற்றும் நல்லாயனாய் பல்லாண்டுகள்
நம் மரியாள் துணை கொண்டு நாளும்
நலமுடன் வாழ்ந்திட வாழ்த்துகின்றோம்.

S.M.***வுளோறன்ஸ்***

## 2ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 05 . 01 . 1941



விண்ணில் 04 . 12 . 2020

அமரர
### மரியநாயகம் ஆசீர்வாதம்பிள்ளை

அப்பா!
அழகான உங்கள் சிரிப்பும்
அர்த்தமான உங்கள் வாழ்வும்
அன்பான உங்கள் பணியும்
அறிவான உங்கள் பேச்சும்
கண்முன்னே தெரிகின்றது
அம்மாவுடன் ஆண்டவன் பாதம்
இளைப்பாறுங்கள்
எங்களுக்காகவும் மன்றாடுங்கள்

செல்வபுரம்,
முல்லைத்தீவு

பிரிவால் துயருறும்
அன்புப் பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிளைகள், உறவுகள்

## நெஞ்சம் மறவாத 9ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 17 . 01 . 1937



மறைவு 05 . 12 . 2013

### அமரர் சந்தியோ அந்தோனிப்பிள்ளை எட்வேட்(JP)

(இறைப்பாறிய NRTP அத்தியட்சகர்)

இறையருளில் இன்புற்றிருக்க
கனத்த இதயத்துடன்
இறைவனை வேண்டுகிறோம்

*இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக ஆனையூர் புனித அடைக்கல அன்னை ஆலயத்திலும் குருநகர் கார்மேல் அன்னை ஆலயத்திலும் 05.12.2022 இல் இரங்கல் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும்.*

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை

மாறாத நினைவுகளுடன்
குடும்பத்தினர்

AD-75

## இறைவன் பாதத்தில் ஈரைந்து வருடங்கள்

அன்னை மடியில் 12 . 10 . 1979



ஆண்டவன் அடியில் 14 . 11 . 2012

குருத்துவம் : 18.05.2011

### அருட்தந்தை கீதபொன்கலன் லக்ஸ்மன்

“நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன் என் ஓட்டத்தை முடித்து விட்டேன் விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன் இனி எனக்கென வைக்கப்பட்டிருப்பது நேரிய வாழ்வுக்கான வெற்றி வாகையே. அதை இறுதிநாளில் ஆண்டவர் எனக்குத் தருவார்” (திமோத்தேயு 4:6–7)

எப்படித் தான் கடந்ததோ பத்து வருடங்கள்
நினைவுத்தடங்கள் ரணமாக நெஞ்சினுள்
நீறு பூத்த நெருப்பாய்!!!
வாழ்ந்தது போதுமென்று வாழ்வளித்த வள்ளலின்
பாதங்களில் வீழ்ந்த மகனே!
கார்த்திகையின் பூக்களை உன் வாழ்வில்
வாழும் போதே நீ பூஜித்துப் போற்றினாய்
அதனால் தான் நீயும் கார்த்திகையில் மறைந்தாயோ!!!

பூக்களின்றிய தேசத்தின்
நாசங்களைப் பார்க்கக் கூடாதென்றோ
விரைவாய்ப் பறந்தோடினாய்
பரமன் பாதங்களைத் தேடி!!!
நிச்சயம் நம்புகின்றோம் நீ நேசித்தவர்களுக்காய்
நெஞ்சாரப் பிரார்த்திப்பாய்!
ஆண்டவன் அடியில் அமைதியுடன் இளைப்பாறு
மீண்டும் நாம் சந்திப்போம்
அமைதி கொள் மகனே!!!

என்றும் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

AD 76-

# அமரர் கலாநிதி அன்ரன் மத்தாயஸ் அடிகளாருக்கு யாழ். பல்கலைக்கழகத்தில் அஞ்சலி நிகழ்வு



அண்மையில் மறைந்த முன்னாள் யாழ்.பல்கலைக்கழக கிறிஸ்தவ இஸ்லாமிய நாகரிகத் துறைகளின் தலைவரும், முது நிலை விரிவுரையாளருமான அமரர் அருட் பணி கலாநிதி அன்ரன் மத்தாயஸ் அடிக ளாருக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வொ ன்று கடந்த வாரம் யாழ். பல்கலைக்கழகத் தில் கிறிஸ்தவ இஸ்லாமிய நாகரிகத்து யின் தலைவரும், முதுநிலை விரிவுரை யாளருமான பேராசிரியர் அருட்பணி போல் றொகான் அடிகள் தலைமையில் நடை பெற்றது. இந்நிகழ்வில் யாழ் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேரா சிரியர் சிறி சற்குணராஜா, யாழ். மறை மாவட்டக் குரு முதல்வர் அருட்பணி ப.யோ. ஜெபரட்ணம் அடிகள், ஓய்வுநிலை தென்னிந்தியத் திருச் சபை ஆயர் ஜெபநேசன், அருட்பணி றொசாய்ரோ அ.ம.தி அடிகள், முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பாலசுந்தரம் பிள்ளை, கலைப்பீடாதிபதி கே. சுதாகர் உட்பட பல கல்விமான்கள் அஞ்சலி உரை களை நிகழ்த்தினார்கள்.

இந்நிகழ்வில் அமரர் அருட்பணி கலாநிதி அன்ரன் மத்தாயஸ் அடிகளாரின் சகோத ரிகளும், மாணவர்களும், நண்பர் களும் கலந்து சிறப்பித்தனர்.

# அன்பிய ஊக்குவிப்பாளர்கள், இணைப்பாளர்களுக்கான ஒன்று கூடல்



யாழ். மறைமாவட்ட அன்பிய ஊக்குவிப்பாளர்கள் மற்றும் இணைப்பாளர்களுக்கான ஒன்றுகூடல் யாழ் மறைக்கல்வி நடுநிலைய கேட்போர் கூடத்தில் கடந்த 12ஆம் திகதி நடைபெற்றது. யாழ். மறைமாவட்ட அன்பிய ஆணைக்குழு இயக்குநர் அருட்திரு மில்பர்வாஸ் அடிகளின் தலைமையில் நடைபெற்ற இவ்ஒன்றுகூடலில் அன்பிய ஆண்டின் மீளாய்வு செயற்பாடுகள் மற்றும் அன்பிய நிறைவுநாள் நிகழ்வுகள் பற்றிய செயற்பாடுகள் குறித்துக் கலந்துரையாடப்பட்டன.

இந்நிகழ்வில் யாழ் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்திரு ஜெபரட்ணம் அடிகளும் அன்பிய இணைப்பாளர்களாக செயற்படும் குருக்களும் ஊக்குவிப்பாளர்கள், நிர்வாகக்குழு அங்கத்தவர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

# இரத்தினபுரியில் இளையோருக்கு நல்லிணக்க ஒன்றுகூடல்



இளையோர்களிடையே நல்லிணக்கத்தையும் சமாதானத் தையும் ஏற்படுத்தும் நோக்கில் யாழ் கரித்தாஸ் கியூடெக் நிறு வனத்தினால் அஜியாமண்டோ சமாதானத் திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்ட இளையோருக்கான சிறப்பு நிகழ்வு இரத் தினபுரி மாவட்டத்தில் கடந்த 11ஆம் 12ஆம் 13ஆம் திகதிகளில் நடைபெற்றது.

யாழ் மற்றும் இரத்தினபுரி மறைமாவட்டங்களைச் சேர்ந்த இளையோர்களை ஒன்றிணைத்து மேற்கொள்ளப்பட்ட இந் நிகழ்வில் இளவாலை, மணற்காடு, புங்குடுதீவுப் பிரதேசங் களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட இளையோர்கள் இரத்தினபுரிப் பிரதேசத்திற்குச் சென்று அப்பிரதேச இளையோருடன் இணைந்து அங்கு நடைபெற்ற நிகழ்வுகளில் பங்குபற்றினர்.

இளவாலைப் பங்குத்தந்தை அருட்தந்தை எரிக்றொசான் அடிகளின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். மாவட்டத்தை சேர்ந்த இளையோர்கள் இரத்தினபுரி மக்களின் வாழ்க்கை முறை, கலாசார மற்றும் பண்பாட்டு விழுமியங்களை அறிந்து கொண்டதுடன் அப்பிரதேச இளையோருடன் நல் லுறவை ஏற்படுத்திக்கொண்டனர்.

# மாகியப்பிட்டியில் போதை எதிர்ப்புப் போராட்டம்




பண்டத்தரிப்புப் பங்கிற்குட்பட்ட மாகியப்பிட்டி புனித. செபஸ்ரியார் ஆலய இறைமக்களால் இளவாலை மறைக் கோட்ட ரீதியாக ஒழுங்கு செய்யப்பட்ட பொதைப் பொருள் ஒழிப்பு விழிப் புணர்வு கடந்த 20.11.2022 அன்று முன்னெடுக்கப்பட்டது.

# வின்சன் டி போல் சபையின் உறவுப்பாலம்



யாழ்ப்பாணம் புனித வின்சன்டிப்போல் மத்திய சபையினர் வலைப்பாடு புனித அன்னம் மாள் பந்தி புனித வின்சன் டி போல் சபையி னருடன் உறவை மேம்படுத்த சந்திப்பொன்றை மேற்கொண்டனர்.

# பத்திரிசியார் கல்லூரி மாணவர்கள் சாதனை





வடமாகாணக் கல்வித் திணைக்களத் தால் பாடசாலைகள் மத்தியில் மாகாண ரீதியில் நடாத்தப்பட்ட புத்தாக்க தானியங்கி தொழில் நுட்பப் போட்டியில் யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி மாணவர்கள் இருவர் தெரிவாகி தேசியரீதியில் நடைபெறவுள்ள போட்டிக்குச் செல்லவுள்ளனர்.

கடந்த 04ஆம் திகதி யாழ். கல்வித் திணைக்களத்தில் நடைபெற்ற இப் போட்டியில் தொழில் உற்பத்திச் சுற்றுப்புறச் சூழல் பிரிவில் செல்வன் அஸ்வின் அவர்கள் முதலிடத்தைப் பெற்றும் சுகாதரம் மருத்துவம் பிரிவில் செல்வன் மரியோயல் அவர்கள் மூன்றாம் இடத்தைப்பெற்றும் தேசியமட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள் ளனர்.

# இறந்த உறுப்பினர்களை நினைவு கூர்ந்த வின்சன் டி போல் சபை



யாழ். மறைமாவட்ட புனித வின்சன் டி போல் சபையில் பணியாற்றி இறந்த ஆயர்கள், ஆன்மீகக்குருக்கள், செயற்குழு உறுப்பினர் கள், அங்கத்தவர்களை நினைவுகூரும்முக மாக ஒப்புக்கொடுக்கப்பட்ட சிறப்புத் திருப்பலி கடந்த 19ஆம் திகதி அரியாலை புனித யூதாததேயு ஆலயத்தில் நடைபெற்றது.

யாழ். மறைமாவட்ட புனித வின்சன் டி போல் சபை ஆன்மீக இயக்குநர் அருட்திரு நேச நாயகம் அடிகளின் தலைமையில் நடைபெற்ற இச் சிறப்புத் திருப்பலியில் குருக்கள், துறவிகள், மறைமாவட்ட வின்சன் டி போல் பந்திகளின் உறுப்பினர்கள், இறைமக்களெனப் பலரும் கலந்து செபித்தனர்.

# "களம் தந்த களங்கம்" தென்மோடி நாட்டுக்கூத்து



"களம் தந்த களங்கம்" என்ற புனித யாகப்பரின் வரலாற்றினைக் கொண்ட தென்மோடி நாட்டுக்கூத்து இளவாலை புனித யாகப்பர் பங்கில் கடந்த 21.10.2022 அன்று மிகவும் சிறப்பாக மேடையேற்றப்பட்டது.

இந் நாட்டுக்கூத்தினை பாஷையூர் மண்ணின் கலைஞரான திரு.செபஸ்தியாம் பிள்ளை வசன்பேர்க் அவர்கள் மிகவும் தத்ரூபமாக நெறியாள்கை செய்திருந்தார். புனித யாகப்பர் ஆலயக் கலைஞர்களையே முழுமையாகக் கொண்டு சிறப்பான முறையில் நெறியாள்கை செய்தமை மிகவும் பாராட்டிற்குரியது. பல்வேறுபட்ட நெருக்கீடுகளுக்கு மத்தியில் வாழும் மக்களுக்கு இத்தகைய பாரம்பரியக் கலைகளின் வெளிப்பாடு பலரது மனதிற்கு இதத்தினையும் ஆற்றல்களின் வளர்ச்சியினையும் வெளிக்கொணர வைத்தது என்பதில் ஐயமில்லை. யாழ் மறைமாவட்டக் குரு முதல்வரின் ஆசியுடனும், பங்குத்தந்தை அருட்ணி.C.G.ஜெயக்குமார் அடிகளின் பூரண ஒத்துழைப்புடனும் சிறப்பாக மேடையேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கரித்தாஸ் அனுசரணையில் இயற்கை வள மேம்பாடு



கியூடெக் கரித்தாஸ் சுற்றுச் சூழல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கடந்த வாரம் கடற் கரையில் கண்டல் தாவரம் நடுகை விழிப்புணர்வு நிகழ் வை இயக்குநர் இயூஜின் பிரான்சிஸ் அடிகளார் தலை மையில் மண்டைதீவு பங்குத் தந்தை, மண்டைதீவுக் கடற் படைத் தளபதி, சமயத் தலைவர்கள், யாழ்.மண்டைதீவு வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கியூடெக் கரித்தாஸ் உத்தியோகத்தர்கள், சிறப்பாக கொழும்பு தேசிய கரித்தாஸ் உத்தியோகத்தர்கள், கிராமிய சுற்றுச் சூழல் குழுக்களுடன் ஒன்றிணைந்து கடற்கரைச் சூழலில் கண்டல் தாவரம் நட்டு இலங்கை இயற்கை வழங்களைப் பாதுகாப் பதற்கான முதல் படிக்கல்லாக அமைந்தது.

மண்டைதீவு மாணவர்களுக்கான குடிநீர்த் தேவைகளைப் பூர்த்தி செய்யப் பாடசாலையி லுள்ள கிணற்றினைப் புனரமைப்புச் செய்ததுடன், தண்ணீர்த் தாங்கி வசதிகளைச் செய்து மாணவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்தவற்றை கொழும்பு கரித்தாஸ் தேசிய நிலைய உத்தியோகத்தர்களினால் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2022ம் ஆண்டு நவம்பர் மாதம் 27ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.